# அறிஞர் அண்ணா

## விருத்தமலர்கள்



**தமிழ்நெஞ்சம்**

# தமிழ்நெஞ்சம்®

உதயம் 1972 – செப்டெம்பர் 2022


ஆசிரியர் / வெளியிடுபவர் :

**அமின் மொஹமெட்**

இணையாசிரியர் :

**முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி**

நிர்வாக ஆசிரியர் :

**சஃபி மொஹமெட்**

ஆசிரியர் குழு :

**ஹிப்ஸுர் ரஹ்மான்**

**கவிஞர் பாலமுனை பாறூக்**

**கவிஞர் நெல்லை உலகம்மாள்**

**பாவலர்மணி இராம வேல்முருகன்**

**கவிஞர் தென்றல் கவி**

**வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்**

**கவிஞர் பொன்மணிதாசன்**

**கவிஞர் அ. முத்துசாமி**

**கவிஞர் ஈழபாரதி**

ஆலோசகர்கள் :

**பாட்டரசர் கி. பாரதிதாசன்**

**கவிதாயினி சக்தி ஜோதி**

# அறிஞர் அண்ணா

விருத்தமலர்கள்



**தமிழ்நெஞ்சம்**

59, rue des Entrechats, 95800 Cergy - France

அறிஞர் அண்ணா
(விருத்தமலர்கள்)

தொகுப்பு : இராம வேல்முருகன்
பதிப்பு : தமிழ்நெஞ்சம் அமின்

15 செப்டெம்பர் 2022

tamilnenjam.com

# அறிஞர் அண்ணா

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற அரசியல் சகாப்தமாக வாழ்ந்து சாதித்து மறைந்த ஒரு மாபெரும் மேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் என்றால் அது கிஞ்சித்தும் மிகையாகாது. ஒரு எளிய குடும்பத்தில் பிறந்து கல்வியாலும் உழைப்பாலும் உயர்ந்து தன் நாவன்மையால் தமிழகமக்களைக் கட்டிப்போட்டு, தமிழ் நாட்டின் தலையெழுத்தை மாற்றிய பெருமை அண்ணா அவர்களுக்கே உண்டு. சுதந்திரஇந்தியாவில் பின்னாளில் அரசியலில் பல மாற்றங்கள் ஏற்படக் காரணமாக இருந்தவர் அண்ணா. “அண்ணா அண்ணா” என்று அண்ணா என்ற ஒற்றைச் சொல்லை வேத மந்திரமாகக் கொண்ட எண்ணற்ற தம்பிகளைக் கொண்ட பேரறிஞரின் சாதனைகள் சொல்லில் அடங்கா. அவரது 113 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவரைப் பற்றி மரபுக் கவிதைகளை வைத்து ஒரு தொகுப்பு நூல் செய்து அதனை, தமிழ் நெஞ்சம் இதழின் இணைப்பாக வழங்க வேண்டும் என எண்ணி அதனை தமிழ்நெஞ்சம் ஆசிரியர் தமிழ்த் தொண்டர் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களிடம் சொன்ன போது செய்யலாம் என உடனடியாக ஒப்புதல் தந்தார். ஐம்பத்தேழு கவிஞர்களின் 179 விருத்தங்கள் நிரம்பிய இக் கவிதை நூல் அறிஞர் அண்ணாவின் பல்வேறு சிறப்புகளைச் சொல்லக் கூடியதாக உள்ளது. தமிழ்நாடு

மட்டுமல்லாது பிறமாநிலத் தமிழ்க்கவிஞர்கள் இலங்கை உள்ளிட்ட பிறநாட்டுக் கவிஞர்கள் எழுதிய மரபுக்கவிதைகள் மட்டும் உள்ளடக்கிய இந்நூல் ஒரு காலப் பெட்டகம்; இன்றும் அண்ணா கவிஞர்ப்பெருமக்களிடையே நிலைத்த புகழை உடையவர் என்பதற்கு இந்நூலே சாட்சியாகும்.

இந்நூலாக்கத்திற்குத் தங்கள் கவிதைகளை அனுப்பிய கவிஞர்ப் பெருமக்களுக்கும் இதனை அழகுற வடிவமைத்து வெளியிட உதவுகின்ற பாவலர் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கும் இனிய இதயங்கனிந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்

அநேக வணக்கங்களுடன்

## இராம வேல்முருகன் வலங்கைமான்

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | பாவலர்மணி இராம வேல்முருகன் வலங்கைமான் | 07 |
| 2. | பாவலர் கருமலைத்தமிழாழன் ஓசூர் | 11 |
| 3. | கவிவித்தகர் பொற்கைப் பாண்டியன், மதுரை | 12 |
| 4. | பாவலர் தமிழ்நெஞ்சம் அமின் பிரான்சு | 13 |
| 5. | பெரும்புலவர் செம்மங்குடி துரையரசன் | 14 |
| 6. | பாவலர் சுப முருகானந்தம், மதுரை | 15 |
| 7. | பாவலர் ஓசூர் மணிமேகலை | 16 |
| 8. | கவிஞர் கு. கதிரேசன், திருச்சி | 17 |
| 9. | பாவலர்மணி சிவ. மணிவேலன், புதுச்சேரி | 18 |
| 10. | பாவலர்மணி வ. க. கன்னியப்பன், மதுரை | 19 |
| 11. | பாவலர் வில்லூர்ப் பாரதி, இலங்கை | 20 |
| 12. | கவிஞர் வாசன் சாவி, சென்னை | 21 |
| 13. | கவிஞர் கேசவதாஸ் சுசீந்திரம் | 22 |
| 14. | பாவலர் இராம மீனாட்சி சுந்தரம், கோவை | 23 |
| 15. | பாவலர் தென்றல்கவி பட்டுக்கோட்டை | 24 |
| 16. | கவிஞர் வீரா பாலச்சந்திரன் திருச்சி | 25 |
| 17. | புலவர் பழனி அரங்கசாமி, ஆலங்குடி | 26 |
| 18. | படைக்களப் பாவலர் துரை மூர்த்தி | 27 |
| 19. | பாவலர் வா சண்முகம், பட்டீச்சுரம் | 28 |
| 20. | கவிஞர் சிவகாமிதேவி சோமசன்மா | 29 |
| 21. | கவிஞர் செகவான், மதுரை | 30 |
| 22. | கவிஞர் குளோரி சக்தி, கரூர் | 31 |
| 23. | கவிஞர் கிறிஸ்டி ரெவல், இலங்கை | 32 |
| 24. | கவிஞர் சு. அய்யப்பன், கோவில்பட்டி | 33 |
| 25. | பாவலர் வ. இராமதாசு தென்பசியார் | 34 |
| 26. | கவிஞர் இரா செல்வபாண்டியன், புத்தாம்பூர் | 35 |
| 27. | கவிஞர் தென்பரை சுப்பிரமணியன் | 36 |
| 28. | கவிஞர் எம் ஆர் ஜெயந்தி, தஞ்சாவூர் | 37 |
| 29. | பாவலர் ஆற்றலரசு, சென்னை | 38 |
| 30. | கவிஞர் இந்திராணி தங்கவேல், திண்டுக்கல் | 39 |

31. பாவலர் மாலதி திரு, தஞ்சாவூர் 40
32. கவிஞர் மா பாலசுந்தரம் 41
33. பாவலர் விசு இமானுவேல் 42
34. பாவலர் புட்பா கிறிஸ்ரி, கனடா 43
35. கவிஞர் பாண்டிச்செல்வி கருப்பசாமி, கோவை 44
36. பாவலர் நிறைமதி நீலமேகம், பெண்ணாடம் 45
37. பாவலர் முனைவர் சி. அ. வ. இளஞ்செழியன், மதுரை 46
38. கவிஞர் இரா மதனகோபாலன், தருமபுரி 47
39. கவிஞர் வீ. க. பொன்னையா, புதுக்கோட்டை 48
40. கவிஞர் வசந்தி ஜெயராஜ், இலங்கை 49
41. கவிஞர் செபா சவிரிமுத்து, இலங்கை 50
42. பாவலர் தனராஜ் பாப்பணன், கோவை. 51
43. பாவலர் பா ச கண்ணன், சேலம் 52
44. கவிஞர் மு வா பாலாஜி, ஓசூர் 53
45. பாவலர் சரசுவதி பாஸ்கரன், திருச்சி 54
46. கவிஞர் கோ அருச்சுனன் 56
47. கவிஞர் பரணிசுபசேகர், மதுரை 57
48. பாவலர் இராம வேதநாயகம், வடமாதிமங்கலம் 58
49. கவிஞர் நீரை அத்திப்பூ, நீர்முளை 59
50. கவிஞர் இப்னு ஹம்துன் பரங்கிப்பேட்டை 60
51. கவிஞர் நம்பிக்கை நாகராசன், கோவை 61
52. கவிஞர் பொன்மணிதாசன் 62
53. புலவர் இளங்குமரன், தேனி 63
54. கவிஞர் பேரா. சே. பத்மினிபாலா 64
55. பாவலர் ஏடி வரதராசன் 65
56. கவிஞர் சா. சரவணன். செய்யாறு 66
57. கவிஞர் தங்க. ஜான்பீட்டர் 67

# அறிஞர் அண்ணா

பெரியாரின் பாசறையில் கற்றார் பாரில்
பெரியோரும் வியந்துநிற்க நடந்தார் நாட்டில்
அரியதொரு தலைவராக வளர்ந்தார் கற்ற
அறிஞரெலாம் போற்றுவழி சிறந்தார் பேச்சால்
பெரியதொரு எழுச்சியினைக் கொணர்ந்தார் போற்றும்
பேரறிஞர் ஆகிமனம் நிறைந்தார் தொண்டால்
உரியதொரு முதல்வரென உயர்ந்தார் என்றும்
ஊர்போற்றும் அண்ணனென ஆனார் வாழி

ஓரிரவில் திரைக்கதையை அமைத்து நாளும்
ஓய்வின்றிப் படித்துயர்ந்து நின்றார் வெல்லும்
பாரினிலே முத்திரையைப் பதித்தார் நாட்டில்
பல்கலைவாழ் கழகமென வாழ்ந்தார் நெஞ்சில்
ஓரிதயக் கனியாக எம்சி யாரை
உயரிடத்தில் வைத்துயர்ந்து நிறைந்தார் என்றும்
ஈரிதயம் இல்லாது கொள்கை மாறா
இமயமென வாழ்ந்துயர்ந்த அறிஞர் வாழி

செவ்வாழைப் பழமாக வறியோர் வாழ்க்கை
சீரழிந்து போவதெலாம் கதையில் சொல்லி
ஒவ்வாத பணக்காரர் போக்கைப் பேச்சால்
ஓட்டிடவே வந்துதித்த கதிரோன் தோழர்
மவ்வலவள் தோழிக்கும் மணமுண் டென்று
மாற்றானின் கருத்துக்கும் மதிப்பைத் தந்தார்
எவ்வாத அரசியலை எட்டித் தொட்டே
ஏதுமின்றிக் காங்கிரசை செய்தார் வாழி!

ஒன்றுகுலம் ஒருவனிங்கே தேவன் என்றார்
    உயர்தமிழன் நல்லொழுக்கம் பேணச் சொன்னார்
நன்றிவரின் ஆற்றலென பிறநாட் டாரும்
    நன்முறையில் பாராட்டும் தரவே செய்தார்
குன்றெனவே உயர்ந்தகுணம் கொண்டார் சாதிக்
    குமுகாய வேறுபாட்டைக் கடிந்து போனார்
என்றென்றும் தமிழ்மக்கள் மறவா வண்ணம்
    இயந்திரமாய் உழைத்ததமிழ் அண்ணா வாழி!

அரிசிவிலை குறைப்பதற்குப் பாடு பட்டார்
    அருந்தமிழர் மனங்குளிரும் பாதை கண்டார்
பரிதியெனத் தமிழகத்தில் வலமும் வந்து
    பழியேதும் இல்லாமல் ஆட்சி செய்தார்
நரிக்குணத்தார் செயல்வாலை நறுக்கிப் போனார்
    நாட்டோரின் நலனொன்றே இலக்காய்க் கொண்டார்
பெரியாரின் தொண்டரென்றும் தம்பி யென்றும்
    பெருமைதனைப் பெற்றஅண்ணா துரையார் வாழி

கலைஞரெனும் தம்பியினைத் தந்தார் நாட்டைக்
    காக்கின்ற நற்பாதை காட்டிச் சென்றார்
தலைவரெனும் சொல்லுக்கு வலிமை கூட்டித்
    தாரணியில் தனித்தன்மை காட்டி நின்றார்
அலைகடலும் நாணுமாறு உழைப்பைத் தந்தே
    ஆலமரத் திராவிடத்தின் வித்தாய் வாழ்ந்தார்
உலைக்களத்தின் நெருப்பாகிச் சமூகக் கேட்டை
    உருத்தெரியா தழித்தெழுந்த அண்ணா வாழி

சீர்திருத்தத் திருமணத்தைச் சட்ட மாக்கிச்
    சேறுநிறை சாதியத்தை ஒழித்த அண்ணல்
ஆர்த்தெழுந்தே ஓடிவரும் தமிழைப் பேச்சால்
    அலங்கரித்து நமக்களித்த அறிஞர்க் கோமான்
வார்த்தெடுக்கும் வார்த்தைகளால் ஒளிரும் சிப்பி
    வடித்தெடுக்கும் காவியத்தால் சிறந்த சிற்பி
பார்த்தனென நோக்கமைந்த செம்மல் மேடை
    பார்த்தழைக்கும் ஆளுமையாம் அண்ணா வாழி!

தோல்விதனைப் பள்ளியிலே பெற்ற போதும்
    துவளாது மீண்டெழுந்து வெற்றி கண்டு
வேல்பிடித்துத் தமிழ்படித்துப் பட்டம் பெற்று
    வேந்தெரெலாம் பாராட்ட வலமும் வந்து
கால்பிடிக்கத் தெரியாத கொள்கை வீரர்
    கரம்பிடித்த எழுதுகோலால் உயர்ந்த சூரர்
கோல்பிடித்து மாநிலத்தை ஆள வந்த
    கொற்றவையின் திருமகனார் அண்ணா வாழி!

ஏ. தாழ்ந்த தமிழகமே என்று நாட்டை
    எழுப்பிவிட மேடைதோறும் முழக்கம் செய்து
வாதாடும் திறனாலே மன்றம் தோன்றி
    வழக்காடி எதிராளி மனத்தை வென்றார்
ஆதார வாழ்விற்குச் சட்டம் போட்டார்
    அடித்தளத்து மக்களுக்குக் கடவுள் ஆனார்
ஊதாரி அரசியலை விரட்டி விட்ட
    உயர்தமிழர் மொழிஅறிஞர் அண்ணா வாழி!

காஞ்சிநகர் தோன்றிவிட்ட அறிஞர் வாழி
கனிச்சாற்றுப் பேச்சுதிர்த்த செல்வர் வாழி
வாஞ்சைமிகு அன்புகொண்ட தலைவர் வாழி
வரலாற்றில் தடம்பதித்த மன்னர் வாழி
ஆஞ்சநேயர் பலங்கொண்ட தொண்டர் கூட்டால்
அதிசயங்கள் நிகழ்த்திவிட்ட நன்னர் வாழி!
நாஞ்சிலெனத் தமிழ்நாட்டை உழுது சென்ற
நற்றமிழர் வழிநடப்போம் உயர்ந்து வாழ்வோம்

**பாவலர்மணி இராம வேல்முருகன்**
வலங்கைமான்

# மாற்றத்தைத் தந்தவர் அண்ணா

வெற்றிலையின் கறைபடிந்த பற்கள் ஆயின்
    வெல்கின்ற எழுத்தினிலே கறைக ளில்லை
நெற்றியிலே சிந்தனையின் வளைந்த கோடு
    நக்கீர எழுத்தினிலே கோட்ட மில்லை
சுற்றிவந்த பகலிரவால் விழிகள் மூடும்
    சுடரெழுத்தில் பொதிந்தபொருள் மூட லில்லை
சொற்களினைத் தீட்டுதற்கே விரல்கள் தாழும்
    சொக்கவைக்கும் எழுத்தினிலே தாழ்வு இல்லை !

மரியாதை இல்லாமல் தமிழ ரெல்லாம்
    மண்மீதில் நாய்போலப் பிறரின் காலைத்
தெரியாமல் நக்கிநக்கி இருந்த போது
    தெளிவான சிந்தனையை ஊட்டி விட்ட
பெரியாரின் வழியினிலே எழுச்சி யூட்டும்
    பெரும்புரட்சிக்  கருத்துகளை எழுத்தில் தந்து
சரியான கொள்கைகளை ஏற்க வைத்த
    சாட்டையடி எழுத்தாளர் அறிஞர் அண்ணா !

அண்ணாந்த வானம்போல் வாய்பி ளந்தே
    அடிமையராய் வாழ்ந்திருந்த தமிழர்க் கெல்லாம்
விண்மீது உதித்தவர்கள் யாரு மில்லை
    வினைஊழால் தாழ்ந்தவர்கள் யாரு மில்லை
எண்ணத்தில் பகுத்தறிவை ஏற்றி நீங்கள்
    எழுந்திட்டால் ஏற்றதாழ்வு எல்லாம் மாறி
மண்ணகத்தில் சரிசமமாய் வாழ்வீர் என்றே
    மாற்றத்தைச் செய்தவர்தாம் அறிஞர் அண்ணா !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

## அண்ணா... என் நா...!

என்நாவில் எப்போதும் உச்ச ரிக்கும்
இனியபெய ரெதுவெனிலோ அண்ணா அண்ணா
என்னெஞ்சம் இராவணப்பே ராற்றல் கொள்ள
இனவலிமை தரும்பெயரோ அண்ணா அண்ணா
தன்னெஞ்சில் தமிழரெலாம் வைத்துக் காக்கும்
தமிழ்வைப்பு நிதியெதுவோ அண்ணா அண்ணா
பொன்னென்றே நம்மினத்தார் போற்றிக் காக்கும்
பொருத்தமுள்ள பெயரனிலோ அண்ணா அண்ணா..!

அண்ணாவுந் தான்பிறக்க வில்லை என்றால்
ஆரியச்சொல் நமையடிமைப் படுத்தி வைக்கும்
அண்ணாவின் பேனாவும் எழுதா விட்டால்
ஆரியமா யையில்நாம் அயர்ந்தே போவோம்
அண்ணாவால் தமிழ்நாடு அமைந்த திங்கே
அன்னைத்தமி ழகமகிழ்வு கொண்டா ளிங்கே
கண்ணாகத் தமிழருக்கே வாய்த்தா ரண்ணா
காலங்க ளண்ணாவின் புகழைப் பேசும்..!

நமஸ்காரம் விரட்டிவிட்ட நாய கன்தான்
நல்வணக்கச் சொல்தந்த தூய வன்தான்
நமக்கெல்லாந் தமிழினிமை தந்த வன்தான்
நாடெல்லாம் தமிழ்மணக்கச் செய்த வன்தான்
இமைபோல நம்கண்ணை அவனும் காத்தான்
இருக்கும்வரை இனத்திற்கே எழுச்சிதந்தான்
நமையுலகில் தலைநிமிர வைத்தா ரண்ணா
நாள்தோறும் அவர்பெயரைச் சொல்லும் என்நா..!

**கவிவித்தகர் பொற்கைப்பாண்டியன்**
மதுரை-3

## இவரொரு பள்ளிக் கூடம்

காஞ்சியில் பிறந்த நல்லோன்
    கடலென ஆற்றல் உள்ளோன்
தீஞ்சுவைப் பேச்சில் இந்தத்
    திக்கெலாம் இழுக்கும் வல்லோன்
வாஞ்சையைப் போல நாட்டை
    வழிமுறை கொள்ள ஆண்டு
பூஞ்சையில் நீரூற் றைப்போல்
    புத்தெழிற் தந்த முன்னோன்

நாட்டினில் உரிமை; பேசும்
    நற்றமிழ் உரிமை; இன்னும்
வாட்டிடும் வறுமை தன்னில்
    வாழ்கிற சமூதா யத்தைத்
தீட்டவே அரசாய் ஆக்கித்
    திக்கெலாம் ஒளிரச் செய்தார்
ஏட்டினில் ஊட கத்தில்
    எழிலுடன் மதிக்க நின்றார்

இப்படி ஓர்நல் மாந்தர்
    எங்கினி கிடைக்கக் கூடும்
இப்படி ஓர்நல் ஆட்சி
    எங்கினி காணக் கூடும்
ஒப்பிலா அண்ணா; நாட்டின்
    உயர்வுதான் அண்ணா; கற்க
அப்பொழு தாள்வோ ருக்கும்
    இவரொரு பள்ளிக் கூடம்

**பாவலர் தமிழ்நெஞ்சம் அமின்**
பிரான்சு

# அண்ணா நீ வாழ்க

அண்ணாஉன் புகழ்பாடும் போது வார்த்தை
அழகாகப் பதிவுசெய்து கொள்ளக் கண்டேன்
மண்ணாண்ட தனிமுதல்வா மறத்த மிழ்தன்
மணியான தமிழ்ப்புதல்வா! நெஞ்சம் தன்னில்
விண்ணாளச் சென்றவுந்தன் வியக்கும் பண்பை
விதம்விதமாய்ச் சொல்லிமகிழச் சோர்வ தில்லை
திண்தோள்கள் புடைப்புறவே வீரம் கொள்ளும்
திசையெட்டும் அண்ணாநீ வாழ்க என்மே!

நூல்யாத்தாய் நுணுக்கமுடன் தமிழ்ச்சொல் லைத்தன்
நூல்மரபு மீறாமல் படிக்க வைத்தாய்
சேல்பாயும் வளநாட்டின் செழுமை கண்டும்
செந்தமிழைப் புகழ்ந்தகம்பன் வேண்டா மென்றாய்
கால்கடுக்கப் பலஊர்கள் பேசச் சென்றாய்
கழகத்தில் தம்பிபலர் உயர, தன்னைப்
போல்பலரும் அணிவகுக்கத் தலைமை யேற்றாய்
புயல்வார்த்தைப் போர்ப்பரணி பாடென் றாயே!

முப்பாட்டன் பலர்பலரும் ஆரி யத்தால்
முனகிடவும் விடாதுதமிழ் மண்ணில் நின்றார்
எப்பாடு பட்டேனும் படுத்த றிந்தே
எந்தமிழர் நலம்காணத் திட்டம் செய்தாய்
ஒப்பாரி வைத்தழுதே ஓடி டாமல்
ஒப்பற்ற பேரறிஞர் அண்ணா வையென்
முப்பாலைத் தந்த தமிழ்நாட்டில் போற்ற
முனைந்தெழுவார் பலரொடுயான் வாழ்என் பேனே!

**பெரும்புலவர். செம்மங்குடி**
**துரையரசத் தொண்டைமான்**
திருவள்ளூர்

## ஆரியமாயை அகற்றிய அண்ணா

காய்புளிச் சொல்லைக் களத்தினில் வீசாக்
கருணையின் வடிவமாம் அண்ணா!
தாய்நிகர் அன்புத் தம்பியர் சேனைத்
தலைவராய் வந்தவர் அண்ணா!!
நோய்மதக் கடவுள் மடமைகள் போக்க
நூல்பல தந்தவர் அண்ணா!
சாய்மனு நீதிச் சழக்குகள் நீக்கச்
சரிசமர் செய்தவர் அண்ணா!!

ஆரிய மாயை அகற்றிட அதனை
ஆய்ந்துமே எழுதினார் அண்ணா!
ஊரினைக் கெடுக்கும் புராணக் குப்பைத்
உலையினில் ஏற்றினார் அண்ணா!!
கோரிய தமிழர் நாடெனும் பெயரை
குவலயம் அழைத்திடத் தந்தார்!
பேரினில் சாதி வாலினை வெட்ட
பேரிகை முழங்கினார் அண்ணா!!

நாடிய மரபில் நல்மணம் புரிய
நாட்டினில் சட்டமும் செய்தார்!
கூடிய சுமையாம் மும்மொழி மறுத்தே
கொள்கையாம் இருமொழி வகுத்தார்!
தேடியே படித்து தென்னவர் நூல்கள்
திராவிடம் காத்திட வாரீர்!
பாடியே அண்ணா பகர்ந்தவை சொல்லிப்
பகைதனை விரட்டிட வாரீர்!!

**பாவலர் சுப முருகானந்தம்**
மதுரை

## ஆற்றல்மிக்க தலைவர் அண்ணா!

அண்ணா என்றால் ஆளுமை!
அழகாய்ப் பேசும் வல்லமை!
எண்ணம் முழுதும் மக்களே!
எழுத்தும் பேச்சும் தத்துவம்!
கண்ணாய் நாட்டைக் காத்தவர்!
கடமை மாற உத்தமர்!
தென்னாட் டுகாந்தி யென்றுதான்
தீர்வாய் அழைப்பர் அன்பிலே!

இயக்கம் கண்ட எளியவர்!
இணக்கம் காட்டும் அரசியல்!
தயக்கம் இன்றிக் கருத்தினைத்
தடமாய்ப் பதித்து வென்றவர்!
அயர்ச்சி என்றும் கண்டிடா
ஆற்றல் மிக்க தலைவராம்!
செயலும் சொல்லும் ஒன்றெனச்
செறிவாய் நாட்டை ஆண்டவர்!

கொள்கை பிடிப்பில் உறுதியாய்க்
கோட்டை கண்ட முதல்வராம்!
உள்ளம் என்றும் வெள்ளையாம்!
உழைப்போர் நலனே சிந்தனை!
தெள்ளு தமிழில் வல்லவர்!
தெளிவாய் உரைப்பார் ஆங்கிலம்!
கொள்ளும் திறனில் நிறைகுடம்!
குணத்தில் அண்ணா சிகரமே!

**பாவவர், முனைவர் ஓசூர் மணிமேகலை**

# தமிழும்  அண்ணாவும்

அறிவில் சிறந்த அறிஞர் ஆகி
அளவி லடங்கா அருமை செய்தார்
பொறியில் கலையைப் பொதித்த மனிதர்
பொதிகைத் தமிழைப் பரப்ப வந்தார்
அறிஞ ரெனவே அமைந்த தலைவர்
அழகாய்த் தமிழி லரிதாய்க் கிடைத்தார்
அறிவா யினிதாய் அமைந்த மொழியை
அழகாய் மொழிந்தே அசத்திச் சிறந்தார்

தமிழா லெழுந்து தலைமை பெறவே
தரமாய்த் தலைவர் பதவி யடைந்தார்
அமிழ்தாம் தமிழை  அழகின் மொழியை
அறிந்து நமக்கே அடுக்கிக் கொடுத்தார்
சிமிழில் அடங்காத் தமிழின் அறிவால்
சிறந்த தலைவ ரெனவே உயர்ந்தார்
தமிழின் தரத்தைத் தரமாய் உயர்த்தி
தமிழ்நா டெனவே தமிழில் மொழிந்தார்...

எழுத்தின் உலகில் எழுந்து சிறக்க
எளிமை அணிந்தே எழிலில் சிறந்தார்
கொழுந்தாய்த் தமிழைக் காத்துச் சிறந்து
கொடியாய்ப் படர வழிகள் கண்டார்
பொழுது கழிய புதுமைப் படைப்பு
பொறுப்பாய் இருந்து நமக்குத் தந்தார்
விழுந்து மறைவோர் போலல் லாது
விதையாய் எழுந்த அண்ணா வாழி!

**கவிஞர் கு. கதிரேசன்**
திருச்சி

## முத்திரை பதித்த முதலமைச்சர் அண்ணா!

அண்ணாவே அண்ணாவே! அடுக்குமொழி அண்ணாவே!
அன்றொருநாள் காங்கிரசை அடக்கிவிட்ட அண்ணாவே!
மண்ணாளப் பிறந்தாயே! மண்ணுலகை மறந்தாயே!
மாற்றானின் தோட்டத்து மல்லிகைக்கு மணமுண்டோ!
விண்ணாளப் போனாயோ! விதியைவெல்ல மறந்தாயோ!
விதைத்துவிட்டாய்! திராவிடத்தில் விவரமான அரசியலை!
தொண்டுள்ள(ம்) உனதுள்ளம்! தொண்டனுக்குத் தொண்டன்நீ!
தொல்லைதரும் இந்தியென்றாய்! தொலைந்துபோனார் காங்கிரசார்!

நித்திலமே நீயுதித்தாய் நெசவாளர் குடும்பத்தில்
நெய்தாயே அரசியலை! நிறுவினாயே தி. மு. க.
எத்தரையோ ஓட்டிவிட ஏழுத்துனக்கோ துணையாச்சே!
எழுதினாயே நாடகங்கள் எதிரிகளைப் பந்தாட
உத்தரவும் போட்டாயே தமிழ்நாடு வந்ததையா!
உனக்குநல்ல அரசியலை ஊட்டியவர் பெரியாரே!
முத்திரையும் பதித்தாயே முதலமைச்சர் பதவியிலே!
முடங்கித்தான் போனாரே முன்பிருந்த ஆட்சியாளர்!

பகுத்தறிவுப் பகலவனின் பாசறையில் வளர்ந்தாயே!
பக்குவமாய் ஆரியத்தைப் பகுத்தறிவால் அடக்கிவைத்தாய்!
தகுதியுள்ள நாடகங்கள் தந்தவரே அண்ணாவே!
தடம்பதித்தாய்! பச்சையப்பன் கல்லூரி வாசலிலே!
வகுத்தாயே சுயமரியா தைத்திரும ணமாம்சட்டம்!
வாக்களித்த மக்களுக்கோ வாழ்வளித்த செம்மல்நீ!
புகுந்துவிட்ட துனதுடம்பில் புற்றுநோயும்! மரணித்தாய்!
புவியெங்கும் அழுகுரலே! புடம்போட்டத் தங்கம்நீ!

**பாவலர் சிவ. மணிவேலன்**
புதுச்சேரி

## அண்ணா என்பார் அறிஞர்தாம்!

அண்ணா என்பார் அறிஞர்தாம்
    அகிலம் போற்றும் அவரைத்தாம்!
திண்ணம் அவரின் பேச்சாலே
    தினமும் உளமும் மகிழ்ந்தோமே!
வண்ணங் கூட்டிப் பேசிடுவார்
    வளமாம் தமிழின் மொழியாலே!
எண்ணம் விதைப்பார் தமிழாலே
    எழிலார் பேச்சின் சுவையாலே!

கன்னல் தமிழில் பேசியவர்
    கருத்தாய்ப் பலவும் சொன்னாரே!
மின்னல் போன்ற விரைவுடனே
    மிளிருந் தமிழில் பேசினரே!
தென்னங் குருத்தின் சுவையுடனே
    திறமாய் நன்மை செய்தாரே!
இன்னும் இன்னுங் கேட்டிடவே
    இங்கே அவரும் இருந்திலரே!

அண்ணன் தம்பி உறவெனவே
    திண்ணம் அவரின் ஆட்சியுமே
அருமைக் கட்சி வளர்த்தாரே!
    தெரிந்தே நலமுஞ் செய்தாரே!
பெண்ணின் பெருமை காத்தாரே
    பேணும் நலங்கள் செய்தாரே!
அண்ணா அவரைப் போலுண்டோ
    அகிலம் முழுக்கத் தேடினுமே!

**பாவலர் மணி வ. க. கன்னியப்பன்**
**மதுரை**

# அறிஞர் அண்ணா

கருவாகி நடராாசன் பங்காரு  பெருந்தவத்தால்
    காஞ்சிபுரம் வரகுவாசல் கண்டெடுத்த செம்மல்
உருவாகி இராசாம ணிமடியில் வளர்ந்திட்டே
    உரியவயது காணுமுன்னே இராணியம்மை என்பாரைப்
பெருவரமாய்க் கரம்பற்றிப் பிள்ளையின்றித் தத்தெடுத்துப்
    பேரறினைப் பேணுவதில்  பேரின்பம் கண்டவரோ
அருங்கல்வி கற்றிடவே ஆனபள்ளி பச்சையப்பன்
    அண்ணார்க்கு அளித்தது இளமுதுவென இருபட்டம்

ஆங்கிலத்தில் சிறப்பாற்றல் அண்ணாதான் கொண்டிருந்தும்
    அருந்தமிழைப் பேசுதலில் பிடிவாதம் அவர்கொண்டார்
ஓங்கிநின்ற சினிமாவில் கதைவசனம் ஒப்புவித்தே
    ஒப்பற்ற திராவிடத்தின் சீர்திருத்தக் கருத்துதித்தார்
தாங்கியவர் பற்பலவாம் வேடமதும் ஏற்றிருந்தார்
    தனித்துவமாய் அரசியலில் தடமதுவும் பதித்திருந்தார்
ஓங்குமொழிப் புலமையினால் ஓடவைத்தார் இங்கிலாந்தை
    ஒப்பரிய அண்ணாபோல் உலகினிலே எவர்தந்தை

பெரியாரைப் பின்பற்றிப் பின்பேதம் கண்டிவரோ
    புதுக்கட்சி தொடங்கியிவர் போராடித் தன்பலத்தால்
சரியாத கொள்கையிலே சரித்திரமாய் ஆகிநின்றார்
    சரிநிகராய் சகலரையும் மதிக்கின்றப் பண்பினாலே
அரசியலில் அளப்பரிய சேவைகளைச் செய்திட்டார்
    ஆங்கிலத்தை இந்தியினை திணிப்பதனை எதிர்த்திட்டார்
இரண்டாண்டு பதவியேற்று இயன்றவைகள் செய்திட்டே
    இறைபாதம் நாடியவர் அண்ணாவை நினைந்திட்டோம்

**பாவலர் வில்லூர்ப் பாரதி**
இலங்கை

# அறிஞர் அண்ணா

அறிஞர்கள் பலவாக அன்பால் நீரும்
ஆனவரே எங்களுக்கும் அண்ணா என்றே
குறிக்கவுமே அடைமொழியே நின்பால் என்றும்
கூப்பிடவே யதுவாகி நின்ற தின்றே
தெறிக்கவுமே நினதாட்சி தென்ன கத்தில்
தெரியாதார் எவரிங்கே தேடிக் காண
வறியார்க்கு வழங்கிடவே வள்ளல் நீரே
வாழ்க்கையதில் வறுமையதை போக்கக் காண

பிறந்தவரே காஞ்சியிலே போற்றிச் சொல்ல
பீடுநடை கண்டவரே வெற்றிச் சாலை
கறந்தபாலெ னவேகற்ற கல்வி யாகக்
கடமையதும் கண்ணியமும் கட்டிக் காக்க
சிறந்தவரே ஆளுமையில் கட்சி ஏற்க
சீர்மிகுந்த தமிழகத்து ஆட்சி யேற்க
மறந்தவரே யிவராகா மக்கள் நாமே
மாநிலத்துப் புகழ்காக்க பாடு பட்டே

தென்னாட்டு பெர்னாட்சா என்ற ழைக்க
தெனவான தெங்களுடை தோள தாக
பன்னாட்டுப் பாமரரும் பார்த்துக்கேட்ட
பாசமுடை வித்தகரே பாரில் போற்ற
உன்னைப்போல் ஊரினிலே உள்ளார் யாரோ
ஊர்போற்றும்உத்தமரே நீரே யன்றோ
தென்னைபோலே அடிமுதலே உச்சி யாக
தென்றலென வீசிடுமே உந்தன் வாசம்

**கவிஞர் வாசன் சாவி**
சென்னை

# அறிஞர் அண்ணா

அருமைத் தமிழைக் காத்திடவே
அறிஞர் அண்ணா பிறந்துவந்தார்
மருவும் உலகம் உய்ந்திடவே
மாண்பைத் தாங்கி உழைத்தாரே
பெருமை கொல்லும் மடமையெலாம்
பெயர்த்தே எறிய அவர்வந்தார்
உருகி உழைக்கும் மாந்தரெலாம்
உரிமை பெறவே தினமுழைத்தார்.

உலகம் தன்னை நெறிப்படுத்த
உயர்வாய் அண்ணா உழைத்தாரே
உலகில் தமிழை நிலைநிறுத்த
உரிய வழிகள் செய்தாரே
கலக மின்றி வாழ்ந்திடவே
கருத்து மழையைப் பொழிந்தாரே
நிலவும் சாதிச் சழக்குகளை
நீக்க நாளும் முனைந்தாரே.

தமிழின் பெருமை உலகறிய
தரணி போற்றும் மாநாடு
தமிழர் மானம் காத்திடவே
தன்மை மிகுந்த தன்மானம்
அமிழ்தின் இனிய தாய்நாட்டின்
அழகுப் பெயரே தமிழ்நாடு
இமிழும் பணியால் உலகெல்லாம்
இறவாப் புகழை அவர்பெற்றார்.

**கவிஞர் கேசவதாஸ் சுசீந்திரம்**

## பேரறிஞர் அண்ணாவின் சிறப்புகள்!

காஞ்சிநகர் ஈன்றெடுத்த கவின்மிகுசீர் பேரறிஞர்!
கன்னலாக அடுக்குமொழிப் பேச்சினிலே சூரரவர்!
வாஞ்சையுடன் தமிழரையே வகைப்படுத்தித் தேற்றிடவும்,
வாழ்த்திடவும் காஞ்சியிதழ் வழிநடத்திப் போற்றினாரே!
நாஞ்சிலெனும் தமிழ்நாட்டை வளநாடாய் மாற்றினாரே!
நன்மைநோக்கி மாநிலத்தில் சுயாட்சிதனை வேண்டினாரே!
காஞ்சியினில் பட்டாடை நெசவினையே நாட்டினாரே!
கலைஞரையே பின்னாளில் கடமையாற்றத் தேற்றினாரே!

கண்ணியமும் கடமையுடன் கட்டுப்பா டுமேகொள்கை,
கனிவுடனே சுயாட்சிதனைக் கண்டிடவே முதல்வரானார்!
தண்மையெழில் தமிழகத்தின் தலைசிறந்த தலைவரானார்!
தமிழினிலே பன்னூல்கள் படைத்திட்ட படைப்பாளி!
பண்ணிசைத்தே பைந்தமிழில் பார்புகழும் படங்கள்தாம்.
பதிந்திட்டார், தமிழினத்தை வசனத்தால் ஈர்த்திட்டார்!
வண்ணமிகு தமிழ்மொழியே வளர்ந்திடவே ஏற்றமிட்டார்!
வானளாவ அமெரிக்க யேல்பள்ளி முனைவரானார்!

அண்ணாவே தமிழினத்தின் இன்சொல்லாய் ஆனதுவே!
ஆண்டதோசீர் இரண்டாண்டே ஆர்த்திடுமே பேச்சாற்றல்!
மன்னனாக வாழ்ந்தாரே, புற்றுநோயால் மாய்ந்தாரே!
மண்ணின்சீர் பரவிடவே யேல்பள்ளிச் சொற்பொழிவு!
கன்னலாகத் தமிழ்நாட்டில் ஆட்சியாற்றி ஈர்த்தாரே!
காவியமாய் அவர்மறைவில் கலந்தனரே பேரலையாய்!
இன்னல்தாம் போக்கிடவே தமிழகமுன் முதல்வரானார்!
ஈடில்லாப் புகழுடனே இன்றளவும் வாழ்கின்றார்!

**பாவலர். இராம. மீனாட்சி சுந்தரம்**
கோவை

## அறிஞர் அண்ணா

காஞ்சிபுரம் ஈன்றெடுத்தப் பேரறிஞர்
　கர்வமில்லா அண்ணா ஆவார்
வாஞ்சையுடன் ஆங்கிலத்தில் புலமைகொண்ட
　மகத்தான தலைவ ராவார்
பூஞ்சோலைத் தமிழகத்தின் முதலமைச்சர்
　பூத்திட்டார் ஆட்சி செய்தார்
காஞ்சியெனும் வாரஇதழ் தொடங்கியவர்!
　கரகரக்கும் குரலும் ஓங்கும்!

விரைவாக திரைவசனம் எழுதிடுவார்
　வெளியேறு இந்தி என்றார்
பெரியாரை நட்பாக்கி நீதிக்கட்(சி)
　பெற்றியுடன் இணைந்தார் கூடி
பெரியாரும் மணியம்மை மணந்திடவும்
　பெரியாரை விலகி நின்றே
திராவிடத்தின் முன்னேற்றக் கட்சியினைத்
　தெளிவாகத் தொடங்கி வைத்தார்

கடமையுடன் கண்ணியமும் கட்டுப்பா டுடனேதாம்
　கடைபிடித்த இவரின் கொள்கை
தடையற்ற இலக்கியத்தின் மொழிப்புலமை
　தடங்கலில்லாப் பேச்சி னாற்றல்
முடங்கியுள்ள தாய்நாட்டைத் திருத்திடவும்
　முயற்சித்தார் பாடு பட்டார்
கடவுளிடம் உண்மையாக வாதிடுவேன்
　கடவுளென்பார் ஒன்றே என்றார்

**பாவலர் தென்றல்கவி - தமிழ்ச்சிட்டு**
பட்டுக்கோட்டை

## அறிஞர் அண்ணா

பேச்சாலே அரசியலில் பெருமாற்றம் கண்டதிங்குப்
பேரறிஞர் அண்ணாவே பெய்களமாய்ப் பெருங்களமாய்
மூச்சாகித் தமிழ்க்கடலில் மூழ்கியநல் முத்தெடுத்து
முழங்கியது தில்லியிலும் முத்தமிழர் உரிமையெலாம்
வீச்சாகி அவர்தந்த விளைநிலமாய் வாதங்கள்
விளங்குற தெப்போதும் விண்ணளக்கும் சொற்போர்தான்
ஏச்சாகி எவர்வீசும் அம்பெல்லாம் ஏந்தியவர்
எழுத்தாணி வில்லெடுத்து எதிர்நீச்சல் போட்டாரே

தேனொழுகு ‘தமிழ்நாடு’ தந்தபெயர் அவரேதான்
தெண்டனிடும் வழக்கமில்லை தெள்ளுதமிழ் முழக்கந்தான்
ஊனொழுகு உணர்வூட்டி உலகத்தமிழ் உறவெல்லாம்
உச்சியிலே கொண்டாடும் ஓர்தலைவர் அண்ணாதான்
கானொழுகு காவிரிபோல் கருத்துவளம் நெருப்புவளம்
கண்டதுண்டோ வரலாறு காலமெல்லாம் இவரேதான்.
மீனொழுகு பாண்டியராய் மேதினிகொள் சோழருமாய்
மிடுக்குடைய சேரருடன் மூவேந்தர் வடிவானார்.

எழுசுடராம் இவராலே இந்நாடு புலர்ந்ததுவே
எத்திசையும் புத்துணர்ச்சி எழுச்சியுடன் மலர்ந்ததுவே
பழுதில்லா ஆட்சியிலே பைந்தமிழர் அலர்ந்தனரே
பகுத்தறிவு மேலோங்கிப் பழங்கதைகள் உலர்ந்தனவே
விழுதென்று தமிழுணர்வு வேரோடிக் கிளர்ந்ததுவே
வெம்பகைவர் புறமோடி வீழ்ந்தோடித் தளர்ந்ததுவே
தழும்போடு தமிழினத்தார் தலைநிமிர்ந்து எழுந்தனரே
தமிழகத்தின் சுடராக அண்ணாவும் மிளிர்ந்தனரே

**கவிஞர் வீரா பாலச்சந்திரன்**
திருச்சிராப்பள்ளி

## தென்னாட்டுப் பெர்னாட்ஷா

பட்டுக்கும் பெயர்போன காஞ்சி மண்ணில்
பார்புகழப் பிறந்திட்டார் அறிஞர் அண்ணா!
பட்டங்கள் பெற்றிட்டார்! சமுதா யத்தின்
பணிக்காகச் சேர்ந்திட்டார் நீதிக் கட்சி!
திட்டங்கள் செயல்படுத்தப் பெரியா ரோடு
திராவிடக் கழகத்தில் உழைத்து நின்றார்!
சட்டத்தில் ஆட்சிமொழி ‘இந்தி’ என்ற
சதிவீழ்த்த "தம்பீ! வா எனவே ஆர்த்தார்!

எத்திசையும் தமிழ்மணக்க எடுத்துச் செல்லும்
ஏடுகளின் ஆசானாய்த் திகழ்ந்த தோடு
புத்தகங்கள் பழுதிப் புரட்சி செய்து
புகழ்மிக்கத் திரைப்படங்கள் பலவும் தந்து
கத்துகடல் அடங்கிடவே மேடை ஏறிக்
கணல்பறக்கும் சொற்பொழிவை ஆற்றி நின்று.
தித்திக்கும் பலகாலும் கற்றுத் தேர்ந்தே
தென்னாட்டுப் பெர்னாட்ஷா ஆனார் அணீனா!

தங்கமகன் தமிழ்நாட்டின் ‘முதல்வர்’ ஆனார்
“தமிழ்நாடு” எனப் பெயரும் சூட்டித் தந்தார்
பொங்குகல்வி இருமொழியாம் கொள்கை கண்டார்
புதியதோர் சமுதாயம் அமைத்து வென்றார்
சங்கத்தமிழ் மாநாட்டை நடத்தி வைத்தார்
தமிழ்மண்ணில் பகுத்தறிவை விதைத்துச் சென்றார்
எங்களதின் உயிரான அண்ணா உம்மை
இனியதமிழ்ச் சொல்லெடுத்து வாழ்த்து வோமே!

**புலவர், பழனி, அரங்கசாமி எம்.ஏ.பிஎட்,**
ஆலங்குடி - 622 361

# தோன்றலர் எம் அண்ணா

நாக ரீகம் நாடி போலே
நாளும் துடிக்க வாழ்ந்தவர் !
ஆக 'அண்ணன், தம்பி' போலே
ஆன உறவு கொண்டவர் !
ஈகம் மிக்க தாய்போல் என்றும்
ஏற்ற முறையே ஏற்றவர் !
நோக டித்தார் தம்மைக் கூட
நோகா துரைத்த நுண்ணியர் !

நாட கங்கள் நாளும் தீட்டி
நாட்டில் நடத்தி வைத்தவர் !
கேட கத்தார் கேட கற்றிக்
கேளிர் எனவே கொண்டவர் !
ஏட கத்தில் என்ன வண்ணம்
ஈட்டி தனைப்போல் பாய்ச்சினார் !
நாட கந்தை நஞ்ச கற்றி
நல்ல வழியே நாட்டினார் !

நல்ல பேச்சால் நாடெல் லாமும்
நாட நடந்த நாவலர் !
பொல்லார் கூடப் போற்றி பாடப்
பூப்போல் மணந்த தேனவர் !
சொல்லும் கூட வெல்லும் என்றே
சொல்ல நடந்த தோன்றலர் !
எல்லா ருள்ளும் என்றும் வாழும்
ஏந்தல் அண்ணா தாமிவர் !

**படைக்களப் பாவலர் துரை. மூர்த்தி**
ஆர்க்காடு - 632 503

## பேரறிஞர் அண்ணா

பேச்சின் ஆற்றல் மிகையாகப்
பேசி உறக்கம் களைத்திட்டார்
மூச்சுக் காற்றும் உள்ளவரை
மூழ்கி உரிமை பெற்றிட்டார்
நீச்சம் ஆன உடலோடு
நீந்தி உழைப்பைத் தந்திட்டார்
வீச்சம் என்று சொன்னோரை
வீழ்த்தி இனத்தை உயர்த்திட்டார்.

அடுக்கு மொழியில் பேசிடுவார்
அன்னைத் தமிழைப் போற்றிடுவார்
விடுக்கும் செய்தி விதையாக்கி
விதைத்தார் தமிழன் உள்ளத்தில்
படுக்கும் போதும் நம்நினைவே
பண்பில் உயர்ந்த தலைவரிவர்
தொடுக்கும் மேடைப் பேச்சுகளால்
தொடரும் மக்கள் கேட்டினிப்பர்.

அண்ணா என்றால் மன்னர்தான்
அன்பால் போற்றும் மக்கள்தான்
மண்ணின் வாசம் மணந்திடவே
மக்கள் தலைவர் இவர்தானே
தொன்மை தமிழின் புகழ்பாடி
தொடர்ந்து மக்கள் பணிசெய்தார்
கண்ணாய்க் கொள்கை வளர்த்திங்கு
கண்கள் துயிலாப் பாடுபட்டார்.

**பாவலர். வா. சண்முகம்**
பட்டீச்சுரம், கும்பகோணம்

## காஞ்சித்தலைவன்

வற்றாத வாய்மொழியில்
    வாழ்த்துரைகள் நிதம் தந்தீர்
வளமான வயல்நாட்டை
    வசமாக்கிப் பெயர் இட்டீர்

அற்றகுள ஆம்பலென
    அணியணியாய்ப் படைகொண்டீர்
அருமூன்று எழுத்தினிலே
    அண்ணனெனும் தடம் பெற்றீர்

முற்றில்லா கடமைதனை
    முறையான வகை செய்தீர்
மூன்றெழுத்து மூச்சாக
    முழுமனதாய்க் களம் கண்டீர்

கற்பூரப் பெட்டகமாய்க்
    கழகத்தில் திறம் கொண்டீர்
கால்கொண்ட நூலகமாய்க்
    கல்விதனைக் கரம் கொண்டீர்

**சிவகாமிதேவி சோமசன்மா**

## அறிஞர் அண்ணா

அண்ணா அண்ணா என்றுன்னை
அன்பால் அழைத்து மகிழ்ந்தோமே!
கண்ணீர்த் துளியே என்றழைத்தாய்,
கண்ணீர் பெருகப் பிரிந்தனையே!
கண்ணைக் கட்டி விட்டதுபோல்
கலங்கி நின்று தவித்தோமே!.
விண்ணில் முட்டி எதிரொலிக்கும்
வீர முழக்கம் பேச்சாற்றல்!

தமிழர் வாழும் நாட்டுக்குத்
தமிழ்நா டென்று பெயர்சூட்டித்
தமிழர் பெருமை காத்தாயே!
தாயின் மொழியில் பூத்தாயே!
தமிழர் நிலையும் நினைப்பெல்லாம்
தாழ்ந்து கிடக்க மறுத்தாயே!
தமிழர் வாழ்வை வளமாக்கத்,
தடைகள் தம்மைத் தகர்த்தாயே!

தந்தை பெரியார் எண்ணத்தைச்
சட்ட மாக்கிச் சீர்செய்தாய்!
இந்தித் திணிப்பை எதிர்த்தாயே,
இந்தி யாவின் ஒருமைக்கே!
எந்தை இறைவன் எங்கென்றார்?
ஏழை சிரிப்பில் தான்என்றாய்!
விந்தை இயற்கை உன்னைத்தான்
விரைந்தே யழைத்தாள் ஏனோசொல்?

**கவிஞர் செகவான்**
மதுரை

## அண்ணா

தமிழகம் கண்டதோர்  தலைமகனாம்
    தனிப்பெரும் சொற்றிறம் மிக்கவராம்
நிமிர்ந்தநல் தமிழகம் உருவாக்க
    நித்தமும் ஓடியே உழைத்தவராம்
இமிழ்கடல் போலவே அயராமல்
    இயங்கிய அறிவுடைக் கோமகனாம்!
அமிழ்தமாம் தமிழினை அளவின்றி
    அள்ளியே தந்தவர் அண்ணாவாம்!

காஞ்சியின் நாயகன் ஆனவராம்
    கனியெனப் பேச்சினில் இனிப்பவராம்!
வாஞ்சையாய் அவர்குரல் கேட்டிடவே
    வரிசையில் மக்களும் நின்றனராம்!
நாஞ்சிலாய் மனங்களை உழுதுநிதம்
    நற்பெரும் தலைவராய் நிலைத்தவராம்!
ஆஞ்சியாம் பெரும்பிணி அணுகாமல்
    அரசியல் மேடையில் சொலித்தவராம்!

திரைப்படக் கதைகளின் வழியாக
    திராவிடக் கருத்தினைப் பகிர்ந்தாரே!
அரையுடை உடுத்திய பாமரனும்
    அரசியல் பேசிடச் செய்தாரே!
புரைபடு சிந்தைகொள் மாந்தரிலே
    புத்தறி வூட்டியே ஒளிர்ந்தாரே!
கரைதொடு காவிரி எனவோடிக்
    கடமையின் பெருங்கடல் கலந் தாரே!

**கவிஞர் குளோரிசக்தி**
கரூர்

## அண்ணா துரை

காஞ்சி தந்த மன்னவனே
கன்னித் தமிழின் காதலரே
வாஞ்சை கொண்ட நல்லவரே
வாழ்வில் கலந்த அண்ணாவே
தீஞ்சொல் கொண்டு பேசுகையிலே
தென்றல் தழுவும் நெஞ்சினையே
பூஞ்சை போலே புகுந்திட்ட
பொல்லா நோயால் இழந்தோமே

சேயைப் போலே அணைத்திடுவார்
செப்பு மொழியால் கவர்ந்திடுவார்
தாயை மறந்தால் வாழ்வுண்டோ
தம்பி எழுக என்றிடுவார்
மாயை ஆகும் ஆரியத்தை
மண்ணில் அறுத்தல் கடனென்பார்
தீயைப் போன்று திராவிடரும்
திரண்டு எழுந்தார் அந்நாளிலே

வங்கக் கடலும் தாலாட்ட
மன்னன் அங்கே தூங்குகிறார்
பொங்கும் அலையே புகழ்பாடு
புனிதன் இவரைத் தினம்பாடு
தங்கத் தமிழன் இவரன்றோ
தமிழர் நெஞ்சம் மறப்பதுண்டோ
எங்கள் தலைவா ஏங்காதே
என்றும் தொடர்வோம் உம்வழியில்

**கவிஞர் கிறிஸ்டி ரெவல்**
இலங்கை

# அறிஞர் அண்ணா

என்றென்றும் தமிழ்நாடும் தமிழ்நாடு சிறக்கும்
    என்றண்ணா பெயரிட்டார் எந்நாளும் மணக்கும்
என்னாட்டில் வடசொல்லா சத்யமேவ ஜெயதே
    இதைமாற்றிப் பதித்தாரே வாய்மையே வெல்லும்
ஒன்றேதான் குலமென்றார் ஒருவனே தேவன்
    உணரத்தான் உரைத்தாரே உணர்ந்தோமா இன்றும்?
இன்னுங்கேள் எதையும்தான் தாங்கும்நல் இதயம்
    எளியோரின் சிரிப்புக்குள் இறைவன் பார் தெரியும்

அடுக்காத சொல்லேதும் அடுக்காத தலைவர்
    அடுக்குஞ்சொல் அழகாக அடுக்கும்சொற் புலவர்
அடுக்காது வேண்டாமே ஆகாச வாணி
    அண்ணாவே மொழிந்தாரே அடடாவா னொலியே
கொடுத்தாரே சீர்திருத்த திருமணச் சட்டம்
    கொணர்ந்தாரே பெரியாரின் கொள்கைக்கே ஏற்றம்
தொடுத்தாரே இருமொழிக் கொள்கைதீர் மானம்
    தொடர்புமொழி ஆங்கிலமாம் தூயதமிழ் மானம் -

கலப்புமணம் புரிவோர்க்குத் தரும்தங்க விருது
    கைம்பெண்ணை மணப்போர்க்கு வேலையில்முன் னுரிமை
நிலம்மீட்டார் ஜமீன்தாரி ஒழிப்புமுறை யாலே
    நிலம்காக்க புஞ்சைக்கு வரிநீக்கம் செய்தார்
உலைபொங்கப் படியரிசி உவப்போடு கொணர்ந்தார்
    உலகத்தமிழ் மாநாட்டை உலகோரே வியந்தார்
அலையாழி அதைநாழிப் படிகொண்டா அளப்பார் ?
    அண்ணாவின் புகழெல்லாம் அடியேனா அளப்பேன்?

**கவிஞர் சு. அய்யப்பன்**
கோவில்பட்டி – 628501

## பேரறிஞர் அண்ணா

எழுகதிர்போல் எழுச்சியுடன் இங்கு வந்தார்
ஏழைகளின் சிரிப்பினிலே இறையைக் கண்டார்
முழுநிலவாய் ஒளியேந்தி இருள கற்றி
முழுமூச்சாய்க் களமிறங்கிக் கொள்கை வென்றார்
பழுதில்லாப் பண்பாளர் பகைவர் போற்றும்
பாசாங்கு தெரியாத பழகும் உள்ளம்
விழுதெனவே படர்ந்திங்கு வேராய் ஆனார்
வீணர்களின் விலாவொடித்து வெற்றி கண்டார்

ஆரியத்தை அடியோடு அழித்தொ ழித்தே
அருந்தமிழை ஆட்சிபீடம் ஏற்றி வைத்தார்
காரியங்கள் கைகூட களமே கண்டார்
கனிமொழியின் மீதென்றும் வெறியே கொண்டார்
சூரியனாய் உலாவந்தே சுற்றம் காத்தார்
சூழ்பகையை ஓடவிட்டு சூது வென்றார்
பேரிகையாய் முரசறைந்தே தமிழைக் காக்கப்
பேரிடியாய் முழங்கிடவே வெற்றி கண்டார்

தம்பியென்றே யாவரையும் அழைத்தார் அண்ணா..!
தமிழ்நாடு என்றிடவே பெயரைச் சூட்டி
நம்பிவந்தோர் அனைவரையும் நட்பில் சேர்த்தார்
நயம்படவே தமிழுரையை அமுதாய்த் தந்தார்
நம்பிக்கைக் கொண்டிங்கு நாட்டைக் காத்தார்
நாட்டிற்கோர் துன்பமெனில் கொள்கை விட்டார்
கம்பரசம் தந்துள்ளம் மகிழ்ந்தார் அண்ணா...!
கனித்தமிழே வாழ்வென்று வாழ்ந்தார் அண்ணா..!

**பாவலர் வ. இராமதாசு தென்பசியார்**
திண்டிவனம்.

## அறிஞர் அண்ணா

காஞ்சியிலே அவதரித்தார், கனிந்தமனம்
காட்டியவர் தம்பி என்றே.
பூஞ்சோலைத் தமிழுரைப்பார்,எதிரிகட்கும்
பூப்போன்றே பதிலைத் தந்து.
வாஞ்சையுடன் அனைவரையும் அரவணைத்தே,
வாகாகக் கொண்டு சென்றார்.
ஊஞ்சலாடும் மனத்தினையே உதறிவிட்டு,
ஊக்கமுடன் தலைமை ஏற்றார்

காட்சிக்கு எளியவராம்,காண்போர்க்குக்
காவலராய் நிமிர்ந்தே நின்று.
ஆட்சிசெய்தார் மிகக்குறைவாய் இருந்தாலும்,
ஆச்சர்யம் தந்தே ஆண்டார்.
நீட்டிட்ட கைகளிலே பொடியுண்டு
நீரோட்டப் பேச்சும் உண்டு.
கேட்டினையே தந்ததந்த கொடுநோயே.
கேளாமல் கொண்டு சென்றே.

தமிழ்நாடு என்றழைக்கத் தயங்காமல்,
தனிச்சட்டம் கொண்டு வந்தார்.
அமிழ்தான தமிழ்மொழியில் அடுக்குமொழி,
அழகுறவே பேசிச் சென்றார்.
உமிழ்கின்ற பகைவரது உளறலையும்
உவப்புடனே எதிர்த்து வென்றார்.
இமிழ்திரையின் அருகினிலே இறுதியோய்வு
இமைமூடிப் பள்ளி கொண்டார்

**கவிஞர் இரா. செல்வ பாண்டியன்**
புத்தாம்பூர்

# அறிஞர் அண்ணா

கொஞ்சிடப் பிறந்த காஞ்சி
குவலயம் போற்றும் தாங்கி!
நெஞ்சினில் நிறைந்த நண்பர்
நினைவெலாம் வாழும் மன்னர்!
பஞ்சமும் நீங்கி வாழப்
பலவழி சொன்னார் ஓங்க!
வஞ்சக மில்லா நாடும்
வளர்தமி ழென்றே பாடும்!

செந்தமிழ் நாட்டின் பேரும்
சிந்தையில் பாயும் தேனே!
சந்தமாய் மணக்கும் மண்ணும்
சாந்தமே தமிழர் நாடும்!
சொந்தமும் சுகமு மிங்கே
சொல்லிடும் சட்டம் கொண்டே
வந்தனை செய்யும் நாடாய்
வணங்கிடச் செய்தார் அன்றே!

மும்மொழி மோகம் தீர்க்க
முடிவுரை எழுத வைத்தார்!
நம்மொழி வளத்தைக் கூட்ட
நற்றமிழ் நூல்கள் தந்தார்!
செம்மொழி ஆட்சி செய்து
செந்தமிழ் ஓங்கச் செய்தார்!
தம்பிரான் இவரைப் போற்றித்
தவழுமே நமது நாடும்!

**கவிஞர் தென்பரைத் தமிழ்ப்பிரியன்**
( எ)
சுப்பிரமணியன்

## அறிஞர் அண்ணா..!

காஞ்சியில் நெய்யப் பட்ட
  கலைமகன் எங்கள் அண்ணா
தீஞ்சுவைத் தமிழைக் காக்க
  தெருவிலே நடந்து வந்தாய்..!
நாஞ்சிலைச் சுமக்கும் நல்லோர்
  நலங்களில் நாட்டம் கொண்டாய்..!
சாஞ்சியின் தூணைப் போலே
  சரித்திரப் பெருமை கொண்டாய்..!

தமிழனம் நிமிர வென்றே
  தலைவனாய் வந்து நின்றாய்..!
அமிழ்தினும் இனிதா, இந்தி?
  ஆய்வுகள் செய்த பின்னே
அமிலமாய்க் கொதித்தெ ழுந்தே
  அருமையாய் எழுதி வந்தாய்..!
தமிழரின் சென்னை தன்னை
  தனித்தமிழ் நாடே என்றாய்..!

இருமொழிக் கொள்கை கொண்டே
  இந்தியை விரட்டி விட்டாய்..!
இருமனம் இணைவ தற்கு
  இனியுமேன் சாதி யென்றே
திருமணச் சட்டம் தந்தே
  தீர்வினை எமக்க ளித்தாய்..!
கருவிழி போலே உன்னை
  கண்களில் பூட்டி வைப்போம்..!

**கவிஞர் எம். ஆர். ஜெயந்தி**
தஞ்சாவூர்

## எதையும் தாங்கும் இதயம் அண்ணா

அறிஞரெனப் பார்போற்றும் அவர்தாம் அண்ணா
அறிவொளியைப் பரப்புகின்ற அழகில் மன்னர்
பொறிஞரெனக் கொள்வதெனில் பொதுமைச் சிற்பி
புகலுமொழி பகுத்தறிவின் புதுமைச் சொற்கோ
நெறிஞரென மொழிவதெனில் நெறியில் நேர்மை
நினைவுலகில் நிறைந்திலங்கும் நெடுநாள் வேந்தர்
வறிஞரென யெவரையுமே வழங்கா வண்ணம்
வறுமையையும் வளரவிடா வள்ளல் அன்றோ !

கதைகளிலே நாடகத்துக் கலையின் ஊடே
கருத்துகளை விதைக்கும்நற் கவனச் சித்தர்
விதைப்பதெலாம் பகுத்தறிவால் விளக்கிப் பெண்கள்
விடுதலையில் விடிவுகாண விழையும் மீட்பர்
புதைந்தழிய மடத்தனத்தைப் பொசுக்கும் போரில்
புதியதொரு வழிநாட்டும் புரட்சிப் போர்வாள்
சிதைக்கின்றார் தமிழ்நிலத்தைச் சிந்தி யென்றே
செந்தமிழர் நாடெனவே சிறப்பைச் செய்தார்!

ஆட்சிமொழி அரியணையில் அகந்தை விஞ்சி
அடுத்தடுத்தே தமிழ்நலத்தை அரிக்கும் இந்தி
மீட்பரென மொழிப்போரில் வினையாள் வேந்தாய்
விதிவகுத்தார் வென்றெடுத்தார் வீரர் அண்ணா
மாட்சிபெறும் தமிழினந்தான் மயக்கம் நீங்கும்
மன்பதையில் அவர்வழியை மரபாய்க் கொண்டால்
ஏட்டினிலே மூச்சினிலே எதையுந் தாங்கும்
இதயமென விளங்குகிறார் என்றும் அண்ணா !

**பாவலர் சோ. ஆற்றலரசு**
சென்னை

## அறிஞர் அண்ணா

பேச்சினில் எழுத்தில் புலமையில் செறிவைப்
    பெற்றவர் நமதுயிர் அண்ணா.
மூச்சினில் செயலில்  முத்தமிழ் ஒன்றே
    முத்தெனக் கொண்டவர் அண்ணா
நீச்சனாய் நம்மை நினைத்தவர் எண்ணம்
    நிலையிலை என்றவர் அண்ணா
தீச்சுடர் போலக் கொள்கையை மாற்றா
    தென்னக காந்திநம் அண்ணா!

கடமையில் ஒன்றிக் கண்ணியம் காத்துக்
    கட்சியை நடத்திய அண்ணா!
மடமையை நீக்கி மங்கிடாப் புகழை
    மந்திரம் ஆக்கினார் அண்ணா!
நடந்திடப் பாதை பகுத்தறிந் தாரே
    நாடகம் எழுதிய அண்ணா!
படங்களில் கதையும் எழுதியே நாளும்
    படைப்புகள் தந்தவர் அண்ணா!

மந்திரமும் மூன்று வாழ்வியல் என்றே
    மனதினில் நினைத்திட வாழ்ந்தார்.
தந்திடும் புதினம் சிறுகதை என்றே
    தரணியும் வாழ்த்தவே வாழ்ந்தார்.
வந்திடும் காலம் கட்சியும் கழகம்
    வரமெனத் தம்பிமார்  போற்றப்
பந்தமாய்ப் பாரில் கட்சியின் பொறுப்பும்
    பட்டமும்  சூழ்ந்தவர் அண்ணா.

**கவிஞர் இந்திராணி தங்கவேல்**
திண்டுக்கல்

## அறிஞர் அண்ணா

பேரறிஞர் அண்ணாவின் பெருமை கேளீர்!
பேச்சாற்றல் மிக்கயிவர்! பெரியார் சீடர்!
பூரணத்தின் பொற்குடமாய்ப் பூமி யாண்டார்!
பொதுவுடைமை கருத்தினையும் புகுத்தி வந்தார்!
வீரத்தைத் தமிழரிடம் விதைத்துச் சென்றார்!
வெற்றியினைப் பெற்றயிவர்!வியக்கும் வண்ணம்
சீரணியைத் தொடங்கிவைத்தார்! தீமை யாகும்
தீண்டாமை அகற்றிடவும் பாடு பட்டார்!

காஞ்சிபுரம் கண்டெடுத்த கடமை வீரர்!
கண்ணியத்தைக் காப்பாற்றும் கட்டுப் பட்டால்
வேங்கையெனச் செயல்பட்டார்! விதியை மாற்றும்
விழிப்புணர்வை ஏற்படுத்தும் விடிய லாகும்
தீஞ்சுவையாய் இனிக்கின்ற தேர்ந்த நூல்கள்
தெளிவாக எழுதிட்டார்!சிந்தை ஈர்த்தார்!
வாஞ்சையுடன் பகுத்தறிவை வழங்கிச் சென்றார்!
வாழ்க்கையினில் மாற்றத்தை வகுத்துத் தந்தார்!

அண்ணாவின் ஆற்றலினை அகிலம் போற்றும்
அவருடைய சாதனைகள் அறிவை வார்க்கும்!
எண்ணத்தால் உயர்வுள்ள எளிமை உள்ளம்
ஏழைகளின் நலத்திற்காய் எதையும் செய்தார்!
திண்ணத்தால் திராவிடத்தின் திறமை கண்டார்!
தென்னாட்டு பெர்னாட்சா தேசம் காத்தார்!
பெண்களுக்காய்ப் பாடுபட்டார் பெருமை சேர்த்தார்!
பேராண்மை கொண்டயிவர்!சொல்லின் செல்வர்!

**பாவலர் மாலதி திரு**
தஞ்சாவூர்

# அறிஞர் அண்ணா

சமயத்தோர் வாழ்ந்திடுமோர் காஞ்சியிலே
சமத்துவமாய்ப் பிறந்த அண்ணன்
இமயத்தைப் போல்வாழ்ந்தே இடர்களிலே
இயக்கத்தைக் காத்த மன்னன்
குமரியிலே தொடங்கியதோர் திராவிடத்தைக்
கூட்டணியாய்க் கொஞ்சி வாழ்ந்தார்
அமரரிவர் ஆளுகைக்கு அஞ்சியோடி
ஆரியரும் பொடியாய்த் தூர்ந்தார்

உதிரமில்லாச் சொந்தங்களை அரவணைத்தே
உடன்பிறப்பாய் அழைத்த அன்பன்
உதித்திடுமோர் சூரியனைச் சின்னமாக்கி
உலகினுக்கோர் விடியல் நண்பன்
பதியமிட்ட தனித்தமிழ்நாட் டினைக்கண்ட
பகுத்தறிவுச் சுடராய்க் காண்பீர்
உதிர்த்திட்ட அனலான முழக்கங்கள்
உருவான கூட்டம் என்பீர்

நெய்திடாத வண்ணமுடை ஆடையாகி
நேர்மையினை அணிந்தே வந்தார்
கொய்திடாத கொள்கையுடைக் கோமகனாய்
குவலயத்தில் தோற்றம் தந்தார்
பெய்திடாத மாமழையாய்ப் பைந்தமிழின்
பேச்சினிலே நெஞ்சைத் தைத்தார்
செய்திட்ட போராட்டம் இந்திக்காய்ச்
செய்வினையும் வைத்தே நைத்தார்

**கவிஞர் மா. பாலசுந்தரம்**
மதுரை

# அறிஞர் அண்ணா

தமிழரின் உள்ளம் தகுமவர் இல்லம்
　தனித்துவ வழியின் தளமவர்
அமிழ்தினும் இனிய அகத்தவர் நாட்டில்
　அறிவினி லாழ்ந்தே அளந்தவர்
உமியெனத் தீதை உவகையி லூத
　உடனடித் தீர்வை உணர்ந்தவர்
தமியராம் அவரின் தாக்கமே இன்றும்
　தடுப்பவ ரில்லை தழுவுவோம்

கலைகளி லாடிக் கனிச்சுவை தேடிக்
　கதைபல மொழிந்த கன்னலர்
அலைபுரள் சொல்லால் ஆக்கிய மல்லால்
　அவையினில் பொலிந்த அன்பினர்
விலைமதிப் பில்லா விழைவினால் நாட்டில்
　விளைவுகள் பலவாய் விதைத்தவர்
தொலைக்கணிப் பொன்றால் தோன்றிய எண்ணத்
　தொகுப்பினால் அணைத்தத் துறையவர்

தனித்தமிழ் நாட்டைத் தகைமையால் நாட்டித்
　தலைமையைத் தானே தாங்கினார்
இனிப்புறைத் தமிழை இயல்பினால் தேக்கி
　இடவல மெதிலும் இயங்கினார்
இனிவருங் காலம் இயங்கவும் ஆற்றல்
　இசைபடு தரத்தில் இருத்தினார்
நனிச்செய லாற்றி நனைந்தவர் புகழை
　நாளொரு வகையான் நாடுவோம்...!!

**பாவலர் விசு. இம்மானுவேல்**

# அறிஞர் அண்ணா

திறமையும் கொண்ட தலைவர்
    திறனிலே மொழியும் கண்டார்
அறிவினில் சிறந்த பெரியார்
    அருமையில்  சிந்தைச் செல்வர்
வறுமையும் உதவும் கண்கள்
    வள்ளலாய் அண்ணா தானே
சிறந்திடும் அறிஞர் மேதை
    சிறப்பினைச் சொல்லக் காண்போம்

கடமையில்  தவறாத் தலைவன்
    கண்ணியம் மிக்க அண்ணல்
உடன்பிறப் பெனவே போற்றி
    உண்மையாம் அன்பைத் தந்தார்
தடைகளை உடைத்தார் எங்கும்
    தழைத்தவர் ஆட்சி தன்னில்
மடமையின் கொள்கை எல்லாம்
    மதிதனில் வென்று நின்றார்

மதங்களின் மடமை சாதி
    மாற்றிட உழைக்கச் சொன்னார்
பதவியில் சென்னை தன்னை
    பதித்தவர்  தமிழ்நா டென்றே
கதரினில் அணிந்த ஆடை
    காத்தவர் தமிழர் மேன்மை
மதிப்புடன் வாழ்ந்த அண்ணா
    மக்களை உயர்த்தி வாழ்ந்தார்

**பாவலர் புஷ்பா கிறிஸ்ரி**
கனடா

# அறிஞர் அண்ணா

விடியல் தேடி விடையாகி
விளைந்த உறவே விடிவிளக்கே
மடியல் இல்லா புகழினினாய்
மாண்பே மண்ணின் மாபிறப்பே
பிடித்த மனதின் அருங்குணமும்
பிள்ளை குணமும் கொண்டோனாம்
முடியில் ஆட்சி அடைந்திட்டும்
மூச்சுக் காற்றில் கலந்தோனாம்

கடமை கொண்டு உழைத்தோனாம்
கருணை அவனின் இலட்சியமாம்
மடமை அகற்றும் மாண்பினனாம்
மானம் காக்கும் உத்தமனாம்
படர்ந்த அறிவுப் பேச்சாளன்
பாரில் உயர்ந்த பற்றாளன்
தடத்தைக் காட்டும் வழித்தோன்றல்
தங்க மகனே அண்ணாதான்

மக்கள் மனதில் நிற்போனாம்
மக்கள் குறையைத் தீர்த்தோனாம்
சிக்கல் இல்லா வாழ்வுதனில்
சிறக்கச் செய்த அறிஞனாவான்
திக்குத் தெரியா வீணோரை
திருந்தச் செய்த பெரியோனாம்
அக்கம் பக்கம் அவன்தமிழை
அறியச் செய்த பற்றாளன்

**கவிஞர் பாண்டிச்செல்வி கருப்பசாமி**
கோவை

## பேரறிஞர் அண்ணா!

அன்னைமொழி அமுதமெனத் தன்னில் கொண்டார்
அருந்தொண்டும் புரிந்தாரே அயரா தென்றும்!
இன்னமுதாய்க் கடமைதனை உரைத்தார் நாளும்
இன்னுயிராய்க் கண்ணியமும் காத்தே வாழ்ந்தார்!
என்றென்றும் திராவிடத்தின் கொள்கை மாறா
எழுச்சியுடன் பகுத்தறிவை விதைத்தார் மண்ணில்
சென்னைதனை தமிழ்நாடாய் மாற்றம் செய்தச்
செந்தமிழின் சீராளர் அண்ணா அன்றோ!

தாய்மொழியைக் காத்திடவே துணிந்தே நின்று
தரணியிலே இந்திமொழி எதிர்த்தார் அண்ணா!
ஓய்வின்றி உழைப்பினிலே உறுதிக் கொண்டார்
உள்ளமதில் உரமுடனே உழைத்தார் நன்றே!
காய்மொழியை அறியாத உள்ளம் தன்னில்
கனிமொழியை விதைத்தாரே களத்தில் நாளும்!
ஆய்தறிந்த சொல்லினையே அமுதாய் ஈந்தார்
அவனியிலே வாழுகின்றார் மணக்கும் சொல்லால்!

அண்ணாவின் சொல்லழகு மணக்கும் நாளும்
அமுதமெனச் சுவையூட்டும் ஆற்ற லாலே!
பண்புடனே நாவடித்த சொற்கள் யாவும்
பண்பாட்டுக் கருத்துகளில் மிளிரு மென்றும்!
திண்ணமுடன் திகழ்ந்தாரே வாழ்வி லென்றும்
திக்கெட்டும் முழங்குதய்யா அண்ணா நாமம் !
அண்ணாவும் மறையவில்லை மண்ணி லின்றும்
அருந்தமிழின் புகழுடனே வாழு கின்றார்!

**பாவலர் நிறைமதி நீலமேகம்**
பெண்ணாடம்

# அறிஞர் அண்ணா

தமிழகம் கண்ட தனிப்பெருந் தலைவர்
    தரணியோர் போற்றும் அறிஞராய் உயர்ந்தார்!
அமிழ்தமாம் தமிழில் அருந்திறம் கொண்டார்
    அடுக்குமொ ழியினில் ஆளியாய்த் திகழ்ந்தார்!
இமயமும் நின்றே தென்திசை வணங்கும்
    ஈடிலாத் தலைமகன் இடுகுழி ஆங்கே!
இமிழ்கடல் ஓரம் நீள்துயில் கொள்முன்
    எழுதகத் தோளால் தமிழகம் சுமந்தார்!

கடமையைச் செய்தார் கண்ணியம் காத்தார்
    கருத்தினில் கட்டுப் பாட்டினைக் கொண்டார்!
இடம்பொருள்  ஏவல் எவற்றையும் உணர்ந்து
    இயல்புடன் இயங்கும் எதிரிலி ஆனார்!
வடபுலம் வியந்த அரசியல் வேந்தர்
    வறுமையை ஒழித்தே வாழவும் செய்தார்!
முடமனம் கொண்டோர் மூடர்தம் அறிவில்
    மூளவே செய்தார் பகுத்தறி வே..ஆம்!

நாடகம் வழியே நல்லவை பரப்பி
    நஞ்சென கலந்த வடமொழி எதிர்க்க
ஊடக மானார் உணர்த்திட முனைந்தார்
    ஊடுரும் தீயவை ஒழிந்திடச் செய்தார்!
ஈடிலாத் தமிழர் இயல்பினை மீட்டே
    இனிவிழா திருக்க எழுந்திடச் செய்தார்
ஆடக மாண்பர்! ஆதவ ஒளியார்!
    ஆயிரம் பேரில் ஒருவராம் அண்ணா!

**பேராசிரியர். பாவலர். முனைவர்.**
**சி. அ. வ. இளஞ்செழியன்**
மதுரை

## பேரறிஞர் அண்ணா

கன்னித் தமிழின் தலைமகனாம்
காஞ்சி நகரில் பிறந்தவராம்
கண்ணாய்த் தமிழைப் போற்றித்தான்
காலம் முழுக்க வாழ்ந்தவராம்
எண்ணம் எல்லாம் தமிழின்மேல்
என்றும் வைத்து இருந்தவராம்
திண்ண மாக வடமொழியைத்
தீயாய் எதிர்த்து நின்றவராம்.

புலமை மிகவும் கொண்டவராம்
புதுமை பலவும் செய்தவராம்
வளமை மிக்கப் பேச்சாலே
வாகை சூடி நின்றவராம்
பழமை வாத முறைகளையே
பல்லைப் பிடுங்கிச் சாய்த்தவராம்
உலகில் தமிழை நிலைநிறுத்த
ஓயா துழைத்தே நிலைத்தவராம்.

பெரியார் வழியில் நின்றவராம்
பெருமை பலவும் கொண்டவராம்
சரியாப் புகழைத் தமிழ்நாட்டில்
தனித்தே பெற்று நிலைத்தவராம்
தரித்தார் தமிழர் மனங்களிலே
தங்கம் நிகர்த்த இடத்தினையே.
உரிய இடத்தைத் தமிழ்த்தாய்க்கே
உலகம் மெச்ச அளித்தவராம்

**கவிஞர் இரா. மதனகோபாலன்**
தருமபுரி

## காஞ்சி தந்த பேரறிஞர் அண்ணா

பழமையான காஞ்சியிலே பிறந்த அண்ணா
பழயகாலம் பெண்ணிடம் உணர்ந்தார் அன்றே
பழவினையைப் பேசுவோரின் இதயம் பார்த்துப்
பழித்தரைக்கும் சீமான்கள் அறிந்த வாழ்க்கை
பழங்குடியை அடிமையாக்கும் சதியைக் கண்டு
பகுத்தறிவுச் சிந்தனையை வளர்க்க எண்ணி
பழமொழியைப் பேசுவோரின் திறமை கண்டு
பலமிழந்தார் விழித்தெழவே படித்தார் அண்ணா

படிக்கின்ற காலத்தில் தெளிந்த சிந்தை
பனிமொழிபோல் மாண்புடைய குணமும் விந்தை
துடிக்கின்ற நெஞ்சத்தின் கவலை எல்லாம்
துடைத்திடவே துணிவுகொண்டு புரட்சி செய்தார்
விடிந்தாலும் ஏற்றத்தாழ்வு மறைய வில்லை
விதியென்று சொல்லுவோரின் மனதைப் பார்த்து
அடிக்கின்ற சமுதாயம் ஒடுங்கிப் போக
அரசியலால் வென்றெடுக்கப் புறப்பட் டாரே

நெஞ்சுக்கு நீதிசொல்லும் அறிவை ஊட்டி
நேர்வழியில் நெஞ்சுயர்த்த அழைத்தார் இங்கே
பஞ்சத்தில் பட்டதுயர் அறிந்த அண்ணா
பட்டத்தை வாங்கிவந்து பயணம் செய்தார்
வஞ்சனைகள் தாக்குகின்ற பலரின் பாதை
வண்ணமொழி தமிழமுதால் அலங்க ரித்தார்
கொஞ்சுகின்ற தமிழ்மொழியை வளர்க்க எண்ணிக்
கொள்கையாலே தமிழ்நாட்டை உயர்த்தி னாரே

**கவிஞர் வீ. க. பொன்னையா**
புதுக்கோட்டை

# அறிஞர் அண்ணா

நடராசன் பங்காரு நாமத்தின் சின்னமதை
நவின்றிடுவேன் விருத்தத்தில் நாட்டமுடன் நானிங்கே
திடமான பகுத்தறிவும் தேசபக்தி மிகுந்தவராய்த்
திகழ்ந்திட்டார் தமிழ்நாட்டில் திண்ணமுடன் பெரியாரும்
நடமாடும் காலத்தில் நற்சிந்த னைவளர்த்தே
நம்பிக்கை ஊட்டிவந்தார் நாட்டையும் காத்துவந்தார்
புடம்போட்ட தங்கமெனப் பூத்திருந்த அண்ணாவும்
புதுமைகளும் செய்துவந்தார் புற்றுடனே வாழ்கையிலே

காஞ்சியிலே பிறந்தாரே காஞ்சீ வரத்தாரும்
கவிதைகளில் புகழ்பரப்பும் கவிஞர் அண்ணாவே
வாஞ்சையுடன் நடந்திடுவார் மனித நேயமுடன்
வளர்த்துவந்தார் மொழிஉரிமை வாத்தி யாரன்றோ
ஆடம்ப ரமில்லாத ஆசா னிவரன்றோ
அன்புடனே பழகிடுவார் அமைதி கொண்டவரே
மூடநம்பிக் கையொழித்த முதல்வர் அறிஞரையா
முத்தமிழும் போற்றுகின்ற முதல்வர் கேளீரோ

மனித நேயமுடன் வாகாய்த் திகழ்ந்திடுவார்
மனதில் எளிமையுடன் மலர்ந்த மனதுடனே
இனிதாய்ப் பேசிடுவார் இனிய நெசவாளர்
இறுதி யாத்திரையும் இன்றும் பதிவாகி
மனிதர் மனதினிலே மாறா நினைவுடனே
மாநிலத்தில் பதிந்துவிட்ட மறைந்த அறிஞரையே
கனிவாய்ப் பைந்தமிழில் கவிதை புனைந்திடவே
கல்லும் கரைந்துவிடும் காஞ்சி வரத்தாரே

**கவிஞர் மருத்துவர் வசந்தி ஜெயராஜ்**
இலங்கை

(மூன்று பாடலும் வெவ்வேறு வாய்பாடுகளில்)

## அண்ணாத்துரை

அண்ணா தமிழக மண்ணின் மைந்தன்
ஆற்றல் மிகுந்திடும் கல்வி மானாம்
உண்மை வழிதனில் தன்னை நடத்தி
ஊரார் புகழ்ந்திடச் சேவை செய்தார்
கண்ணும் கருத்துடை கடமை வீரர்
காதல் தமிழினில் கொண்டு வாழ்ந்தார்
பண்ணில் திராவிடர் கொள்கை எழுதிப்
பாட்டாய்த் திரைப்படம் செய்தார் அன்று

பெரியார் கொள்கையில் நின்ற அறிஞர்
பேசும் வார்த்தையில் உத்த மனாவார்
பரிவு உடையவர் ஏழ்மைக் குடியில்
படித்து ஆங்கிலம் கற்றுத் தெளிந்தார்
விரிவாய் மேடையில் செப்பும் மொழியில்
வியக்கும் உரைநடை ஆற்றல் படைத்தார்
உரிமைக் குரலினைத் தூக்கி முழங்கி
உலகின் அரங்கினில் நின்றார் சிறந்து

இல்லை என்பவர் துன்பம் கண்டு
இன்னல் நெஞ்சிலே நித்தம் கொண்டார்
தொல்லை வந்தது முட்டும் போழ்தும்
தொண்டு வேலைகள் செய்தே நின்றார்
சொல்லில் அன்பினைக் காட்டி மக்கள்
சோகம் நீங்கிட மார்க்கம் சொன்னார்
வல்ல செய்கைதாம் வாழ்ந்து காட்டி
வாழ்வில் தன்னையே அர்ப்ப ணித்தார்

**கவிஞர் செபா சவிரிமுத்து**
இலங்கை

## பேரறிஞர் அண்ணா

காஞ்சிபுரம் அண்ணாவைக் கண்ட ஊர்தான்
கல்லல்ல மாணிக்கம் கவர்ந்த ஊர்தான்!
வாஞ்சையாலே தமிழைத்தன் வரமாய்க் கொண்டார்
வடக்கத்தார் மொழிஇந்தி வழிய டைத்தார்!
பூஞ்சையெனக் காங்கிரசைப் போக வைத்தார்
புதுக்கட்சி கழகத்தைப் புலர வைத்தார்!
பூஞ்சோலை தமிழகத்தில் பூக்க வைத்துப்
புத்துணர்வை அரசியலில் புகுத்தி னாரே !

ஆசிரியர் பணிசெய்தார் ஆசைக் காக
அரசியலே வாழ்க்கையென் றாக்கிக் கொண்டார்!
நேசித்தத் தமிழைத்தன் நெஞ்சில் வைத்தே
நெம்புகோலா முரைவீச்சால் நினைவில் நின்றார்
ஏசியவர் இவர்நட்பிற் கேங்கி நின்றார்
இணையற்ற தலைவராக இதயம் வென்றார்
வாசிக்கும் பழக்கத்தை வழிபா டென்பார்
வாசிக்கும் நூல்களையே வணங்கிட் டாரே !

இராமசாமிப் பெரியாரோ டிணக்கம் கண்டார்
ஈடுபட்ட நீதிக்கட் சிவிட்ட கன்றார்!
உராய்வுகளை ஒதுக்கியவர் உதயம் செய்தார்
உதயசூரி யனோடுதித்த திமுக வையே !
இராப்பகலாய்ப் பாடுபட்டா ரியக்க மோங்க
இனியதமிழ் மக்களவர் இதயம் வாங்க !
திராவிடரென் றடையாளம் தீட்டி விட்டார்
திருநாட்டு மக்களவைத் திரள கத்தே !

**பாவலர் தனராஜ் பாப்பணன்**
கோவை

## அறிஞர் அண்ணா

உலகத் தமிழர் மாநாட்டை
உரிய முறையில் நடத்தினீரே
கலகம் புரியும் கூட்டத்தைக்
கடமை வழியில் கடந்தீரே
உலவும் தென்றல் காற்றாக
உந்தன் மொழியும் இருந்ததய்யா
பலவும் கற்றுக் கொண்டோமே
பரந்த மனத்தீர் நன்றியய்யா

அடுக்கு மொழியில் நீபேச
அகிலம் வியந்து காணுமைய்யா
எடுக்கும் செயலில் உன்கரமோ
ஏற்றம் தன்னைக் கூறுமைய்யா
தடுப்பு யாவும் தரணியிலே
தகர்ந்து போகச் செய்தீரே
அடுப்பு மூட்டும் பெண்களுக்கோ
அன்னை போல வாழ்ந்தீரே

தந்தை பெரியார் வழிதோன்றி
தரணி எங்கும் சிறந்தீரே
மந்தைக் கூட்டம் எமக்காக
மாற்றம் தரவே முயன்றீரே
சிந்தை நிறைந்து நிற்கின்றீர்
சிந்தும் குருதி சொல்லுதய்யா
எந்தை என்றே எண்ணுகின்றோம்
எதிலும் உந்தன் விம்பமைய்யா

**பாவலர் பா. ச. கண்ணன்**
ஆத்தூர் சேலம்

## விளங்கிடுவார் வில்லின் அம்பாய்

அரசியலில் அதிசயம்தான் அறிஞர் அண்ணா
அறிவாற்றல் மிகுந்தவர்தான் எங்கள் அண்ணா
விரல்வித்தைத் தமிழாலே விந்தை செய்தார்
வீச்சுமிக்க படைப்புகளால் புகழை எய்தார்
குரலெடுத்துப் பேசுகின்ற பேச்சோ தேனாம்
கூறுகின்ற கருத்துக்கு நிகர்தான் வானாம்
தரமான அரசியலால் மனங்கள் வென்றார்
தமிழகத்தின் ஒப்பில்லாத் தலைவர் அண்ணா

விரிவானச் சிந்தனையின் விடியல் அண்ணா
விதைபோலே விழுந்தவர்தான் எங்கள் அண்ணா
பெரியாரின் சித்தாந்தம் பெரிதாய்க் கொண்டார்
பெரும்புரட்சி செய்தன்றோ மாற்றம் கண்டார்
சரியானப் பாதையினைக் காட்ட வந்தார்
சலிக்காத உழைப்பாலே வளர்ச்சி தந்தார்
சரியாமல் மாநிலத்தின் மானம் காத்தார்
சத்தியத்தின் வழிகளிலே உயர்வை வார்த்தார்

மாற்றாரும் மதிக்கின்ற மாண்பைச் சொன்னார்
மக்களாட்சி மகத்துவத்தின் மகிமைச் சொன்னார்
ஏற்றதொரு வாழ்விற்கு எளிமை சேர்த்தார்
ஏழையரின் சிரிப்பிலன்றோ இறைவன் பார்த்தார்
நேற்றாகி இன்றாகி என்று மானார்
நேர்மைக்கும் நீர்மைக்கும் சான்றாய் ஆனார்
வீற்றிருப்பார் இதயத்தில் என்றும் அன்பாய்
விளங்கிடுவார் குறிக்கோளாய் வில்லின் அம்பாய்

**கவிஞர் மு. வா. பாலாஜி**
ஓசூர்

## அறிஞர் அண்ணா
## இனியொருநாள் நீவந்தால்

இனியொருநாள் நீவந்தால் இதயநிறை
பக்தியினால்  இகத்தி  லுள்ள
மனிதகுலம் முழுவதுமே மண்டியிடும்
உன்முன்னால் மாண்பைப் போற்றும்
தனிமனித மானத்தைத் தக்கவைத்துக்
கொள்வதற்குச்  சான்றாய் மாறி
முனிவனென நீநின்று முடிபான
வழிசொன்னாய் வாழ்க வாழ்க

மீண்டுமிங்கு நீவந்தால் மீண்டுவரும்
நல்வாழ்வு மீட்சி யோடு
வேண்டுகின்ற நலமனைத்தும் வேகமுறப்
பல்கிவிடும் வேட்கை யோடு
மூண்டுவிடும் சமுதாய மூடப்ப
ழக்கமெலாம் முன்னே நிற்காப்
பூண்டோடே அழிந்துபின்னர் பூத்துவரும்
நல்லுலகம் நேரில் காண்போம்

அண்ணனென நீயிருந்தாய் அதற்கேற்ற
உடன்பிறப்பாய் நாங்க ளெல்லாம்
வண்ணமுற வாழ்ந்திருந்தோம், வாழ்வெல்லாம்
போச்சுதைய்யா வருத்தம்  பாவம்
திண்ணம்நீ வருவதெனில் தித்திக்கும்
நம்வாழ்வும் திரும்பி வாவா
அண்ணனுமே கிடைத்ததனால் ஆட்கொள்ளும்
பேரின்பம் அறிவாய் நீயே

எழுதுகின்ற கோலதனை எடுத்தேநீ
பிடித்திட்டால் எங்கு மெங்கும்
அழுதபிள்ளை வாய்மூடும் அப்படியே
உருகிவிடும் ஆற்றல் தாராய்
பழுதேதும் இல்லாத பக்குவந்தான்
பெற்றிடவே பண்பே வாராய்
எழுதுகின்ற கோல்கொண்டே எழுந்தின்றே
வந்திடவே ஏற்றந் தானே

சொல்லேரின் உழவனென்றே சோதிமிகப்
பெற்றவனே சொந்தம் நீயும்
வில்கொண்டே விளையாடும் வீரர்கு
லக்கொழுந்தே விந்தை நீயும்
அல்லலினை யறுக்கின்ற அழகான
சொற்பெருக்கால் அவலம் நீக்கித்
தொல்லைகளைத் துடைத்தருளத் துரிதமாக
வந்திடுக தேவா நீயே

தமிழ்நாடெ னப்பெயரைத் தந்திட்டப்
பெரியீரே தரணி போற்றும்
கமழ்கின்ற கலைமணத்தைக் கைவழியும்
வாய்வழியும் காலம் வென்றே
உமிழ்கின்ற ஆற்றலினை உணர்வாகக்
கொண்டவரே உயிரில் நின்ற
அமிழ்தேயெம் ஆருயிரே , அழைக்கின்றோம்
வந்திடுக அண்ணா நீயே

**பாவலர். சரஸ்வதி பாஸ்கரன்**
திருச்சி

## அண்ணா பிறந்தாரே

கண்ணின் இமைபோல் தமிழ்காக்க,
கன்னித் தமிழின் புவிகாக்க,
பண்டைத் தமிழர் புகழ்காக்க,
பாமர மக்கள் அறிவுபெற,
மண்ணில் மடமாம் இருள்கிழிக்க,
மலரும் அறிவின் ஒளிசேர்க்க,
மண்ணில் அண்ணா செங்கதிராய்
மாசில் காஞ்சி பிறந்தாரே.

பண்பால் தமிழின் ஊற்றெடுத்துப்
பொதிகை தென்றல் காற்றெடுத்து
வண்ண மலரின் மணமெடுத்து
வீரத் தமிழன் இனமெடுத்துப்
பண்ணாய் மண்ணில் இசையெடுத்துப்
பசுமைத் தமிழின் இசைபாட
வண்ணச் சோலைக் குயிலாக
வந்தே அண்ணா பிறந்தாரே.

மூட பழக்க வழக்கத்தில்
மூழ்கும் மக்கள் விழித்திடவே
நாடி நன்மை நன்றுரைக்க
நல்ல வழிகள் காட்டிடவே
உடமை உணர்வாய் உழைத்திடவே
ஊரில் நன்மை தழைத்திடவே
கடமை செய்யும் வல்லோனாய்
காஞ்சித் தலைவர் பிறந்தாரே.

**கவிஞர் கோ. அருச்சுணன்**

## அறிஞர் அண்ணா

மொழியாலே முளைத்தவரே முன்னவரே நீர்தானே
முதல்வரெனும் பதவியினை அலங்கரித்த நல்லவரே!
மொழிகொஞ்சும் உரையாலே மௌனத்தைக் கலைத்தவரே.
மோனையுடன் எதுகைவர இயல்பாக்கி வென்றவரே
விழியாக மொழிகாத்து வெற்றிபெற்ற திராவிடமே
வெந்தணலாய் இந்திதனைப் பொசுக்கிவிட்ட சூரியனே
வழியெல்லாம் தமிழாகி வாழ்வையுமே தமிழாக்கி
வாழ்ந்தவரே பல்லாண்டு வாழ்ந்திடவே வணங்குகிறேன்

ஆழியெனும் தேரேறி அரசவையின் கட்டிலேறி
அருந்தமிழ்மா மொழிக்காக அயராமல் உழைத்தீரே
ஆரணங்குத் தமிழ்மகளை அனுதினமும் போற்றியதால்
அருந்தொண்டு பலபுரியும் அருளாசி பெற்றீரே
வாழியநீர் எனச்சொல்லி வாழ்த்துப்பா நானெழுத
வகையாக உள்நுழைந்த வல்லவரே பெருந்தகையே
வாழ்வாங்கு வாழ்ந்திடுமே வையகமும் போற்றிடுமே
வல்வினைகள் விலக்கியதோர் வலிமைமிகு செயலாலே.

ஏழையரின் சிரிப்பினிலே இறையவனைக் கண்டுருகும்
எழிலார்ந்த தலைமகனே என்னிதய நாயகனே
ஏற்றதொரு வழித்தடத்தை எல்லோரும் பெற்றிடவே
எந்நாளும் பணியாற்றும் என்னினிய சூரியனே
தோழமையாம் மனம்கொண்டு தொண்டுகளும் பலகண்டு
தோல்விக்கு விடைசொன்ன தூயவனே நாயகனே
தோளோடு தோள்நின்று துயர்போக்கும் வழிகண்டு
தூணாக நிமிர்ந்திட்ட தூயவனே வணங்குகின்றேன்

**கவிஞர் பரணி சுப சேகர்**
மதுரை

## எங்கள் அண்ணா!

அடுக்குமொழி அறிஞரிவர் எங்கள் அண்ணா
அழகான தமிழ்மொழியின் மைந்தர் அன்றோ!
படைத்திட்ட கதையெல்லாம் திரையி லேதான்
பாங்காகக் கண்டோமே அந்த நாளில்!
புடம்போட்ட தங்கமவர் எங்கள் அண்ணா
புதுப்பாதை காட்டினாரே பொலிவாய் அன்றோ!
கடைக்கோடி மாந்தனுமே நலமாய் வாழ
கண்ணான நன்மைகளைச் செய்தார் அன்றே!

சொன்னதையே செய்திட்டார் எங்கள் அண்ணா
சொல்லாமல் விட்டதையும் செய்தார் அன்றே!
அன்பினிலே ஓங்கியநல் அண்ணா தானே
அருள்தனிலும் உயர்ந்திட்டார் அந்த நாளில்!
பன்னலமும் மாந்தருக்கே எங்கள் அண்ணா
பளிங்காகச் செய்தாரே பொலிவாய் அன்றோ!
இன்தமிழே எல்லோரும் பயின்று வாழ
இந்தியையும் எதிர்த்திட்டார் உயர்ந்தார் அன்றே!

ஓராண்டே ஆட்சிசெய்வேன் என்றே எண்ணி
ஒருவிரலைக் காட்டினாரே அண்ணா அன்றே!
பாராண்ட அரசரவர் பண்பாம் அண்ணா
பைந்தமிழில் பனுவல்கள் யாத்தார் அன்றோ!
சீராட்சி செய்திட்டார் செம்மை யாக
செந்தமிழில் *தமிழ்நாடு* பெயரை வைத்தார்!
ஊரெல்லாம் பேர்சொல்லி வாழ்த்தி னாரே
உன்னதமாம் அண்ணாவின் பேரே வாழி!

**பாவலர் இராம. வேதநாயகம்**
வட.மாதிமங்கலம்

# அறிஞர் அண்ணா

சேர்க்கும்மனத் திருக்கின்ற தூய எண்ணம்
    செகம்வாழச் சொல்லாக்கும் மேடை சொல்லும்
பார்க்கின்ற காட்சியிலே பாமரர்க்கும்
    பயன்விளைக்கும் செயலுக்கே முதன்மை தோற்றம்
யார்க்கிந்த தூயமனம் வாய்க்கும் வாய்க்கும்
    எம் அண்ணா நினைவெல்லாம் மக்கள் பக்கம்
சீர்கொண்ட வரலாறு பொன்னெ ழுத்தால்
    சொல்கவிதை இலக்கியங்கள் அதற்கே வித்தாய்.

ஏற்றமெலாம்  தமிழனுக்கே இவரின் நோக்கம்
    எதிர்த்தவரைப் படைபோல எதிர்க்கும் ஆக்கம்
நேற்றும்தான் இன்றும்தான் என்றைக்கும்தான்
    நிலைத்தபெயர் அண்ணாவின் இமய எல்லை
வேற்றுமொழி தமிழமுதை விழுங்கப் பார்த்தால்
    வேரறுக்கும் படைத்தலைமை அண்ணா பக்கம்
ஆற்றுகின்ற செயலெல்லாம் ஏழை நெஞ்சில்
    ஆர்வமுடன் இனிக்கின்ற தேனைச் சேர்க்கும்.

பேசுதமிழ் மடைதிறந்த வெள்ளம் வெள்ளம்
    பெற்றதாயும் மகிழ்கின்றாள் உலகே சொல்லும்
ஆசுகவி போல்வருமே எழுத்தெல் லாமும்
    அத்தனையும் முத்தனைய வித்தாய் வெல்லும்
காசுபணம் பார்க்காத கனிந்த உள்ளம்
    கடந்தபாதை பகுத்தறிவு ஈரோட் டில்லம்
வீசுமணம் திராவிடத்தின் வெற்றி உள்ளும்
    விளைத்ததுவே பேரறிஞர் அண்ணா ஏற்றம்!

**கவிஞர் நீரை, அத்திப்பூ**
நீர்முளை 614711

## அண்ணா

காஞ்சியில் பிறந்த கனித்தமிழர்
  கழகமும் எமக்காய்க் கண்டிருந்தார்
வாஞ்சையும் மிகுந்த வழிகாட்டி
  வகைவகை எழுத்தால் விளக்கானார்
நோஞ்சை விழுந்த தமிழ்நிலத்தை
  நலமுற வைத்த நல்லாசான்
பூஞ்சை பிடித்த பழக்கமெலாம்
  புதைபடச் செய்த பகுத்தறிவே!

நாலரை அடியில் நம்இமயம்
  நாடறிந் தபெரும் பேரறிஞர்
வாலறுந் துவட வானரங்கள்
  ஓடவிட் டொருவர் எம்தமையர்
நூலெடுத் தடிமை நூலறுத்த
  நுண்ணியர் நற்றமிழ் ஆளுமையார்
கோலெடுத் தவரின் கொள்கையிலே
  கொற்றவர் தமிழர் ஆளட்டுமே

ஏழையின் சிரிப்பில் இறையோனை
  எளிதாய்க் காணும் வழிசமைத்தார்
வாழையைப் போலும் வழிவழியாய்
  வளமிகு தமிழை ஒலிக்கவைத்தார்
மாழையில் அவரோ மாசறுபொன்
  மாண்பினைக் காத்த மன்னவரே
பேழையாய் நெஞ்சில் பொதித்துவைத்தோம்
  பேரறி ஞர்தம் பேச்சுகளே!

**கவிஞர் இப்னு ஹம்துன்**
பரங்கிப்பேட்டை

## பேரிறைவன் எங்கள் அண்ணா!

ஒளிகொடுக்கும் கதிரென்றே தமிழர்க் கெல்லாம்
உதவுகின்ற உள்ளத்தில் நிறைவைக் கொண்டு
வளியென்ற பெயரினிலே உயிராய் வந்து
வழங்குகின்ற கருணையிலே தாய்மை தந்தார்
களிக்கின்ற பாசத்தில் தம்பி என்று
கனிந்துவந்து பழமாகிப் பரிவைத் தந்தார்.
உளிசெதுக்காச் சிலையெங்கள் அண்ணா அண்ணா
உலகெல்லாம் போற்றுகின்ற எங்கள் அண்னா.

நதிகொடுக்கும் பலனெல்லாம் ஒன்றாய்க் கூட்டி
நலஞ்சேர்க்க விழைத்திடுவார் இறைவன் என்றே
இதுயெங்கள் நாடென்று எடுத்துக் காட்டி
எழில்தானே எம் தமிழர் குணமே என்பார்
புதுமையினைக் கண்டெடுத்துப் பழமை போற்றி
புகழ்மாலை சூட்டிடுவார் தமிழுக் கென்றும்
பொதுவாகும் நீதியினைப் புரிவீர் என்ற
போப்பாண்டர் என்பார்க்கும் அண்ணா போதி !

நிலவாகி குளிர்ந்திருக்கும் நினைவே அண்ணா!
நிதியாகும் அமுதன்றோ எங்கள் அண்ணா
உலகாளும் பேரறிவில் எங்கள் அண்ணா
உயர்ந்திருக்கும் இயமன்றோ எங்கள் அண்ணா
வலம்வருவார் எழையரின் சிரிப்பில் எங்கும்
வன்பசியைப் போக்குகின்ற வளமாய் அண்ணா
உலகுருள நலஞ்சேர்க்கும் செயலில் எல்லாம்
உறைகின்ற பேரிறைவன் எங்கள் அண்ணா!

**கவிஞர் நம்பிக்கை நாகராசன்**
கோவை

## பெரியாரின் பெருந்தொண்டன்

அடுக்குமொழி யென்றிங்கே யாரும் சொன்னால்
அண்ணாவின் பெயரன்றோ நினைவில் துள்ளும்
அடுக்கடுக்காய் அண்ணாவின் சொற்ப தங்கள்
அற்புதங்கள் எல்லாமும் நெஞ்சை அள்ளும்
மிடுக்கான மீசையுடன் மேலெ ழும்பி
மிளிர்கின்ற நாசியன்றோ எட்டிப் பார்க்கும்
இடுக்கிவைத்த பொடிமணமும் அங்கே நம்மோ(டு)
இடையிடையே நாசிவழி சண்டை போடும்

பெரியாரின் பெருந்தொண்டன் ஆக வந்து
பேரியக்கத் தளபதியாய் மாறிப் போனார்
வறியோரின் வலியகற்ற இயக்கம் கண்டு
வளர்த்தெடுத்தார் முன்னேற்றக் கழகம் ஒன்றை
புரியாத அரசியலை புரிய வைக்கப்
புதுப்பாதை வழிசென்றார் தேர்தல் கண்டார்
அறுபத்து ஏழினிலே வென்றார் நாட்டில்
அதிசயிக்கும் வகையினில்நல் ஆட்சி தந்தார்

ஓராண்டே முதல்வரென ஒளிர்ந்த போதும்
ஒய்யாரத் தமிழகத்தை உயரச் செய்தார்
வேறாரும் செய்யாத விந்தை நூறு
வியக்கின்ற வகைசெய்து பெற்றார் பேறு
நூறாண்டு தாண்டியென்ன தமிழ கத்தில்
நுண்ணறிவில் இவர்போல சிறந்தா ருண்டோ?
பேராற்றல் கொண்டவரின் பெருமை பேசப்
பேரறிஞர் செயல்வாழ்த்த வார்த்தை யில்லை

**கவிஞர் பொன்மணிதாசன்**

## அண்ணா என்னும் ஒளிவிளக்கு

கேட்டார்ப்பி ணிக்க மொழிந்து
  கேளார்க்கு வேட்பப் பொலிந்து
நாட்டோரின் மனத்தில் நிறைந்து
  நல்லோரின் அவையில் சிறந்து
தேட்டமிகு தமிழைச் சுமந்து
  தென்றலெனும் காற்றாய்த் தவழ்ந்து
ஏட்டினொளிர் எழுத்தாய் மிளிர்ந்த
  எங்கள்கதி ரோனாம் அண்ணா

அரசியலில் புரட்சி யானார்.
  அறிவுலகின் அண்ணன் ஆனார்.
திரையுலகில் புரட்சி செய்தார்.
  சிறையிருப்பின் புரட்சி யானார்.
உரைநடையின் உரைகல் லாகி
  உயிர்த்தபெரும் புரட்சி செய்து
விரைமலரில் நிறையும் தேனாய்
  உலகெல்லாம் வாழ்ந்தார் அண்ணா!

முப்பாலின் பெருமை சொன்னார்.
  முத்தமிழின் சீர்மை சொன்னார்.
ஒப்பரிய நூல்கள் யாத்து
  ஒண்டமிழ்த்தாய் அடிக்குத் தந்தார்.
செப்பரிய செயல்கள் செய்து
  சீரோங்கத் தமிழ்நா டென்னும்
ஒப்பரிய பெயரைச் சூட்டி
  ஒளிவிளக்காய் ஆனார் அண்ணா!

**புலவர் இளங்குமரன்**
தேனி

## எங்கள் அண்ணா

தேன்சொட்டும் தமிழை நெஞ்சில்
    தினந்தோறும் தேக்கித் தேக்கித்
தென்னவரின் உள்ளந் தன்னில்
    தென்றலென நாளும் தோய்ந்து
பின்னவரும் போற்றும் வண்ணம்
    பெருமைமிகு செயல்கள் செய்து
மன்னவராய் வாழ்ந்தார் அண்ணா
    மாநிலத்தார் நாளும் போற்ற!

கஞ்சிவர மண்ணில் தோன்றிக்
    கற்பகமா விருட்சம் ஆனார்
துஞ்சுகின்ற போதும் கூட
    துணையாகத் தமிழைக் கொண்டார்
விஞ்சுகின்ற அறிவைக் கூட்டி
    வியப்பினிலே மக்கள் ஆழ
நெஞ்சமெலாம் புகுந்தே எங்கும்
    நிறைந்தாரே எங்கள் அண்ணா

காகப்பட் டராய்ந டித்தார்
    கம்பரசம் பிழிந்து தந்தார்
வேகமுடன் விதைக்கும் பேச்சால்
    விந்தைமிகு கூட்டும் கண்டார்
தாகமெலாம் தீர்ந்து போகத்
    தமிழகமாம் பெயரைத் தந்தார்
நாகமெனும் இந்தி நீக்கி
    நமதன்னைத் தமிழைக் காத்தார்!

**கவிஞர். பேரா. சே. பத்மினிபாலா**
தாமரைக்குளம்

# அறிஞர் அண்ணாவே...

உன்னைநீ வென்று விட்டால்
    உலகையே வெல்ல லாகும்
என்றொரு வாச கத்தை
    இயல்புடன் நெஞ்சில் ஏற்றி
அன்றுளார் வீரம் தன்னை
    அதிகமாய் ஆக்கி வைத்து
இன்றுமே இறவா அண்ணா
    என்னுடன் வாழ்கின் றாயே

உன்பெரும் எதிரி உம்மை
    ஓங்கியே தாக்கித் தாக்கித்
தன்பலம் இயக்கக் கூடும்
    தனிமையில் இளைக்கக் கூடும்
தன்னையே தாக்கும் போது
    தளர்வற தாங்கத் தாங்க
உன்பலம் உயரும் என்னும்
    உயர்மொழி சொல்லிப் போனாய்

உன்மொழி இன்னுங் கேட்க
    ஓர்வரம் இல்லை ஆனால்
இன்மொழி யோடு நானும்
    என்றுமே வாழ்வ தற்குப்
பொன்மொழி சொல்லிப் போன
    பொருவிலா எங்கள் அண்ணா
என்மொழி உன்னை மட்டும்
    என்றுமே வாழ்த்தி நிற்கும்

**பாவலர் ஏடி வரதராசன்**

# அறிஞர் அண்ணா

அருந்தமிழின் இலக்கியத்தில் ஆற்றலினைப் பெற்றதனால்
கரும்பெனவே இனித்திட்டார் காளையர்தம் மனத்தினிலே
விருப்பமுடன் முன்மொழியும் வீறுடைய பேரறிஞர்
பெருமதிப்பின் அண்ணாவால் பேருவகைப் பெற்றனரே!!!

திருநகராம் காஞ்சியிலே தேர்ந்திட்ட தவப்புதல்வன்
அருமைநிறை நடராசன் அன்பொளிரும் பங்காரு
உருவான நல்மனத்தால் உயர்பொறுப்பின் தலைமையென
திருமகனார் பிறந்ததனால் தேயமது சிறந்ததுவே!!!

அறிவொளியின் மாண்பதனை அகத்தினிலே கொண்டதனால்
செறிவான பேச்சாற்றல் சீர்மிகு நல் எழுத்தாற்றல்
தெறிக்கின்ற அடுக்குமொழி திறன் மிகுந்த புலமையென
பறிக்கின்ற நன்மலரால் பார்மீதில் ஒளிர்ந்தாரே!!!

அன்புநிறை பெருங்குணத்தால் அரசியலில் கோலோச்சி
கன்னலெனும் தமிழினிலே கருத்தாழம் மிகுந்திடவே
இன்முகத்துச் சிரிப்பினிலே ஈந்திட்டார் முதல்வரென
தென்றலிடைத் தாம் கலந்து தென்பொதிகை மலரானார்!!!

அண்ணாவின் அருட்கொடையால் அருள்பெற்ற பலநூல்கள்
கண்ணிகராய் ஒளிவீசி காலமெல்லாம் மிளிர்ந்திடவே
மண்மீது மாப்புகழில் மாத்தமிழர் கலைஞருமே
அண்ணாவின் அடிபற்றி அரசாட்சி புரிந்தாரே!!!

எண்ணற்ற மாநாட்டில் இளமரிமா அண்ணாவே
கண்ணிகராய்க் காத்திட்டே கழகமதை வளர்த்ததனால்
அண்ணாவின் பகுத்தறிவில் ஆழ்ந்திட்ட தமிழகமோ
விண் வியக்கும் புகழெனவே விரிகதிரில் சிறந்திடுமே!!!

**கவிஞர் சா. சரவணன்**. செய்யாறு.

# அறிஞர் அண்ணா

வளமுடன் தமிழை வார்த்து
   வழங்கினீர் உயிரில் சேர்த்து
உளமுடன் அன்னை என்றே
   உயர்த்தினீர் உலகில் நன்றே
குளமதில் பூத்து பார்க்கும்
   குமுதமாம் கமலப் பூவாய்
இளமுகங் காட்டி நிற்பாய்
   இன்முகங் கொண்டே அண்ணா..!

நிறைமதி கொண்ட அண்ணா
   நினைவினில் தாங்கி வந்தோம்
கறைபடா உள்ளம் கொண்டாய்
   கவனமாய் சொல்லில் நின்றாய்
குறைபடா நூல்கள் தந்தாய்
   குவலயம் மதிக்க வாழ்ந்தாய்
இறைவிழி காட்டி நீயும்
   இலக்கியம் ஊட்டும் தாதி!

அன்புடன் தமிழும் உன்னை
   அளவிளா மகிழ்வில் அன்னை
இன்புறும் நாளைத் தந்தாய்
   இந்தியை எதிர்த்து நின்றாய்!
தென்னகக் காந்தி யென்று
   திராவிட நாட்டில் வாழ்ந்தாய்!
தென்மகன் நீதான் அண்ணா..!
   தேன்தமிழ் அறிஞர் அண்ணா..!!

**கவிஞர் தங்க. ஜான்பீட்டர்**
பாளையங்கோட்டை

காஞ்சீவரம் நடராசன் அண்ணாதுரை
(C. N. Annadurai,
15 செப்டம்பர், 1909 – 03 பெப்ரவரி, 1969)
ஓர் இந்திய அரசியல்வாதியும்,
மதராஸ் மாநிலத்தின் கடைசி முதல்வரும்,
தமிழகத்தின் முதலாவது முதலமைச்சருமாவார்.
இவர் அறிஞர் அண்ணா எனவும்
பேரறிஞர் அண்ணா எனவும் அழைக்கப்படுகிறார்.
இவர் இந்தியா குடியரசான பிறகு,
ஆட்சி அமைத்த காங்கிரசல்லாத
முதலாவது திராவிடக்கட்சித் தலைவரும்,
அறுதிப் பெரும்பான்மையுடன்
ஆட்சி அமைத்தவரும் ஆவார்.




அண்ணாதுரையின் நினைவாக அண்ணா பல்கலைக்கழகத்தின் கிண்டி வளாகத்தில் உள்ள பொறியியல் கல்லூரியில் உள்ள அண்ணாதுரையின் சிலை

---

அண்ணா நினைவிடம், மெரீனா கடற்கரை, சென்னை



பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

இணைப்பு

செப்டெம்பர் 2022



# அறிஞர் அண்ணா

## விருத்தமலர்கள்